# அரங்கம் செய்திகள்


தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, நவம்பர் 23, 2018. இதழ் - 40







**தந்தையைப்போல, மகனே நீ தவறுகள் செய்யாதே!**

செங்கோல் தவறாது முறைசெய்து மக்களைக் காக்கும் மன்னன் ....

பக்கம் - 07



**மாவீரர் நாள் நவம்பர் 27 தமிழர்களின் நடுகல் வழிபாட்டின் பிரதிபலிப்பு**

பக்கம் - 06



'பசுமை நகர்வு'' -- கழிவுப் பொருள் மீள் பயன்பாட்டு விழிப்புணர்வுபற்றிய கண்காட்சியும் விற்பனையும்கி

சமகாலத்தில் சவாலுக்குரியதாக மாறிவரும் பிளாஸ்டிக்.....

பக்கம் - 09



**மட்டக்களப்பு மழைக்கு: மரவள்ளி பொரியலும் மாட்டிறைச்சி சூப்பும்**

எதிர்பாராதவிதமா மழையில் நனைந்துவிட்டீர்கள்,

பக்கம் - 08

## களுதாவளை 'ருத்ர யாக நிகழ்வில் சனநெரிசல் - 15 பேர் காயம்'



மட்டக்களப்பு, களுதாவளை பிள்ளையார் ஆலயத்தில் நடந்த ருத்ர யாக நிகழ்வில் ஏற்பட்ட சனநெரிசலில் சிக்கி 15 பேர் வரை காயமடைந்ததாக களுவாஞ்சிகுடி வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சுகுணன் தெரிவித்துள்ளார்.

ஆலயத்தில் நடந்த யாகத்தின் இறுதியாக அங்கு ருத்திராட்ச கொட்டைகள்

தொடர்ச்சி... (பக்கம் -03 )

## இலங்கையில் வாகன விலை அதிகரிக்கும்



இலங்கையில் வாகனங்களின் விலை அடுத்த வருடம் 10 – 15 வீதத்தால் அதிகரிக்கும் என வாகன இறக்குமதியாளர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் நாணய பெறுமதி வீழ்ச்சி மற்றும் அரசியல் நெருக்கடி நிலை காரணமாக இந்த விலை அதிகரிப்பு ஏற்படும் என அவர்கள் கூறியுள்ளனர். எதிர்வுகூறல்களை தாம் மேற்கொள்ள முடியாவிட்டாலும், வாகன விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாத நிலை இருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்.




## இடைக்கால வரவு செலவுத்திட்டம் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

நீடித்துச் செல்லும் அரசியல் நெருக்கடியினால், அடுத்த நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்குப் பதிலாக இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளதாக மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இடைக்கால வரவு செலவுத் திட்டத்திற்கான அங்கீகாரத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை வழங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ அவர்களின் பிரதமர் அலுவலகத்தில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்

தொடர்ச்சி... (பக்கம் -03 )






## மாவீரர் தினத்துக்குத் தடை கோரி மனு



விடுதலைப்புலிகள் அமைப்பின் மாவீரர் நாள் நினைவேந்தல்களுக்கு தடை விதிக்குமாறு கோரி யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நம்பர் 21 ஆம் திகதி மனுவொன்றை தாக்கல் செய்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பாக பட்டியலிப் பட்டுள்ளதால் அந்த அமைப்பின் உறுப்பினர்களை நினைவுகூர அனுமதிக்க முடியாது என்று தமது மனுவில் கோப்பாய் பொலிசார் கோரியுள்ளனர்.

தொடர்ச்சி... (பக்கம் -15 )







# கிழக்கு சூறாவளிக்கு வயது 40.



காரைதீவு நிருபர் சகா)

1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி கிழக்கு மாகாணத்தை உலுக்கிய அகோர சூறாவளிக்கு இன்று(23) வெள்ளிக்கிழமை நாற்பது(40) வயதாகின்றது.

கிழக்கில் திருகோணமலை தொடக்கம் அம்பாறை மாவட்டம் ஈறான கரைப்பிரதேசங்களை அச்சூறாவளி புரட்டி எடுத்தது.

இன்றைய இளம்சந்ததியினருக்கு இச்சூறாவளி பற்றி தெரிந்திருக்காது.

அச்சூறாவளியினால் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் மரணமானார்கள். பத்து லட்சத்துக்கு மேற்பட்டேர் பாதிப்புக்குள்ளாகினர். இரண்டரை லட்சம் வீடுகள் பாதிப்புக்குள்ளாகின. 28ஆயிரம் தென்னைகள் அடியோடு பிடுங்கிவீசப்பட்டன. 11 அரிசி ஆலைகள் முற்றாக சேதமாக்கப்பட்டன.



1978.11.23ஆம் திகதிமாலை 6.30மணிமுதல் மறுநாள் 24ஆம் திகதி அதிகாலை 4.30மணிவரை சூறாவளி அகோரமாகத் தாக்கி கிழக்கை சின்னாபின்னமாக்கியது.

இவற்றை ஈடுசெய்ய அன்றைய அரசுக்கு 60கோடி ரூபா தேவைப்பட்டது. சூறாவளியின் 40ஆவது ஆண்டு நிறைவு நாள் கிழக்கெங்கும் பரவலாக நினைவுகூரப்படுகின்றது.

# உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிகழ்ந்த விவாக, பிறப்பு, இறப்பு பதிவுகளை இணைய கணனி வசதிமூலம் வழங்கும் திட்டம்




மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் முதல் தடவையாக கணணி வலையமைப்பூடாக இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ள விவாக, பிறப்பு, இறப்பு பதிவுகளை பொதுமக்கள் பெற்றுக் கொள்ள முடியும் என மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மேலதிக பதிவாளர் நாயகமுமான மா.உதயகுமார் மாவட்ட ஊடகப்பிரிவுக்குத் தெரிவித்தார்.

பொது மக்கள் இதற்கான விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து உரிய கட்டணத்தினை செலுத்தி உடனடியாக பிரதிகளை பெற்றுக்கொள்ளலாம் எனவும் கால விரயத்தினையும் பண விரயத்தினையும் தவிர்க்கும் முகமாக அரசாங்கம் இவ்வாறான செயற்திட்டத்தை முன்வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இணையக் கணணி வசதியின் ஊடாக இந்த நாடளாவிய மற்றும் வெளிநாட்டில் நிகழ்ந்த விவாக, பிறப்பு, இறப்பு பதிவுகள் வழங்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இந்த வசதிகளை பொது மக்கள் மாவட்ட செயலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

1960 ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரையான பதிவுகளை எதிர்வரும் 29ம் திகதி முதல் வார நாட்களில் திங்கட்கிழமை முதல் பெற்றுக் கொள்ள முடியும்.

# காரைதீவு மாணவிகள் சர்வதேச அபகஸ் போட்டியில் சாதனை..




(காரைதீவு நிருபர் சகா)

18வது சர்வதேச அபகஸ் போட்டியானது அண்மையில் கொழும்பு சுகததாச அரங்கில் நடைபெற்றது. இதில் 15 க்கு மேற்பட்ட உலக நாடுகளைச் சேர்ந்த 2000 மாணவர்கள் பங்குபற்றி இருந்தனர். இப்போட்டியில் மாணவர்களுக்கான வினாத்தாள் 05 நிமிடங்களுக்காக வழங்கப்பட்டது. இதில் சாதனை படைத்த சாதனையாளர்களுக்கான சாம்பியன் கிண்ணங்கள் வழங்கப்பட்டன.. காரைதீவு அபகஸ் நிலையத்தைச் சேர்ந்த எஸ். சபிஸ்கரி மற்றும் அவ்றிட் மற்றும் றீஹா ஆகிய மாணவிகள் சம்பியன்களாக கிண்ணங்களைப் பெற்றனர். குறித்து ஒரு அபகஸ் நிலையத்திலிருந்து 03 மாணவர்கள் உலக சாம்பியன்களாக தெரிவுசெய்யப்பட்டமை சரித்திர சாதனையாகும்.

# சிவாநந்தா பழையமாணவர் சங்கத்தின் வைரவிழா!


(காரைதீவு சகா)

உலகின் முதல் தமிழ்ப்பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் உருவாக்கிய மட்டக்களப்பு கல்லடி சிவாநந்தா தேசிய வித்தியாலய பழையமாணவர் சங்கத்தின் வைரவிழா எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது.

பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் முருகேசு முருகவேள் தலைமையில் 60வது வருடாந்த பொதுக்கூட்டம் மற்றும் வைரவிழா நிகழ்வுகள் நடைபெறவிருக்கின்றன. இராமகிருஸ்ணமிசன் மட்டு மாநில முதல்வர் ஸ்ரீமத் சுவாமி தக்ஸயானந்தா ஜீயின் ஆசியுடன் அன்றைய நிகழ்வுகள் யாவும் நடைபெறவுள்ளன. காலை 8மணிக்கு கல்லடி இ.கி.மிசன் ஆச்சிரமத்தில் விசேட பூஜை நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன. சிவாநந்தா வித்தியாலயம் 90வது வருடத்தை அடைகின்ற அதேவேளை அதன் பழைய மாணவர் சங்கம் 60 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முக்கியமானதொன்று. அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பழையமாணவர் சங்கச் செயலாளர் எஸ்.பவானந்தராஜா கேட்டுக்கொள்கிறார்.

# கிழக்குப் பல்கலைக்கழகப் பரீட்சைகள்



கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானம், விவசாயம் மற்றும் கலை கலாசார பீட மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளன என கிழக்குப் பல்கலைக் கழக உபவேந்தர் கலாநிதி த. ஜெயசிங்கம் தெரிவித்தார்.

பல்கலைக்கழக விடுதி வசதியுள்ள மாணவர்கள் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை விடுதிகளுக்கு திரும்பலாம் எனவும் அவர் கூறினார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலை கலாசார பீடம் 2016-2017 முதலாம் வருடம் 2ம் தவணை, விஞ்ஞான பீடம் 2013-2014 மூன்றாம் வருடம் 2ம் தவணை, இரசாயனவியல் 2011-2012 விசேட நான்காம் வருடம் 1ம் தவணை, விவசாய பீடம் 2013-2014 நான்காம் வருடம் 1ம் தவணை ஆகிய பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கே எதிர்வரும் 29ஆம் திகதி பரீட்சைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# துறைசார் கலைஞர்கள் பத்துப் பேர் கௌரவிப்பு!



கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் காரைதீவு பிரதேசசெயலக கலாச்சாரப்பிரிவு மற்றும் பிரதேச கலாச்சார அதிகார சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் ' கலைஞர் சுவதம் ' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், காரைதீவு பிரதேசசெயலகப்பிரிவிலுள்ள பல்துறை சார்ந்த கலைஞர்கள் கடந்த புதன்கிழமை பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

பிரதேச கலாச்சார உத்தியோகத்தர் வி.விக்னேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக காரைதீவு பிரதேசசெயலாளர் வேதநாயகம் ஜெகதீசன் பிரதம அதிதியாகக்கலந்துகொண்டர்.

பிரதேசத்திலுள்ள கலை,இலக்கிய துறைகளில் புகழ்பெற்ற இரா. கிருஸ்ணபிள்ளை (இலக்கியம்) வி.ரி. சகாதேவராஜா(இலக்கியம் ஊடகம்) இ.கோபாலசிங்கம் (குறும்திரைப்படம்)

தொடர்ச்சி... (பக்கம் -15 )

தொடர்ச்சி...

# இடைக்கால வரவு செலவுத்திட்டம் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

கருத்து வெளியிட்ட அவர், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அனைத்துத் திணைக்களங்களுக்குமான நிதி ஒதுக்கப்படும் என்றும் கூறினார்.



ஆனால் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற முடியாதென ஐக்கியதேசியக் கட்சி கூறுகின்றது. சாதாரண 113 உறுப்பினர்களின் பெரும்பான்மையை மஹிந்த ராஜபக்ஷ அணியினரால் பெற முடியாதென கட்சியின் மூத்த உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கூறியுள்ளார்.

ஆனாலும் இடைக்கால வரவுசெலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என மஹிந்த தரப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளார். இந்த நிலையில் மஹிந்தவின் அமைச்சர்களின் அதிகாரிகளுக்கான சம்பளக் கொடுப்பனவு மற்றும் சலுகைகளை நிறுத்துமாறு வலியுறுத்தியும் ஐக்கியதேசியக் கட்சி புதன்கிழமை நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திடம் பிரேரணை ஒன்றை கையளித்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவின் பிரதமர் அலுவலகத்துக்கான கொடுப்பனவுகளை நிறுத்துமாறு வலியுறுத்தி பிரேரணை ஒன்றை ஐக்கியதேசியக் கட்சி, நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் கடந்த 19 ஆம் திகதி சமர்ப்பித்திருந்தது.

மஹிந்தவுக்கு எதிராக கடந்த 14, 16 ஆம் திகதிகளில் நிறைவேற்றப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்ற ஹன்சாட் பதிவுப் புத்தகத்தில் வெளியாகியுள்ள நிலையில், இந்தப் பிரேரணைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

ஆனால் இவ்வாறு அமைச்சுக்களுக்கான நிதி முடக்கப்பட்டால் சமுர்த்தி அதிகாரிகள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோருக்கான கொடுப்பனவுகளை வழங்க முடியதென மஹிந்த தரப்பு கூறுகின்றது. அரச உயர் அதிகாரிகளும் அவ்வாறு கூறுகின்றனர்.

இதேவேளை, இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற விடாமல் தடுத்தால். அது மக்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில், வாக்கெடுப்பு நடைபெறும்போது வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர்கள் வெளியேறக் கூடும் என உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிப்பார்கள் என்றும் கூறப்படுகின்றது.

அவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் வாக்களிக்காமல் வெளியேறினால் இடைக்கால வரவு செலவுத் திட்டம் நிறைவேறலாம் எனவும் கூறப்படுகின்றது.மஹிந்த அரசாங்கம் சட்டத்திற்கு முரணானது. ஆனால் மக்களின் நன்மை கருதி இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டிய தேவை இருப்பதாகவும் அதனால் முரண்பாட்டில் ஓர் உடன்பாடாக விட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் உள்ளது என்றும் ஐக்கியதேசியக் கட்சியின் உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி ஆகிய கட்சிகளும் இதே கருத்தைக் கொண்டுள்ளதாக கொழும்பு அரசியல் தகவல்கள் கூறுகின்றன.

தொடர்ச்சி...

## களுதாவளை 'ருத்ர யாக நிகழ்வில் சனநெரிசல் - 15 பேர் காயம்'

பக்தர்களுக்கு வழங்கப்பட்டதாகவும், அதன்போது ஏற்பட்ட நெரிசலில் பலர் காயமடைந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்திருந்தனர்.

அதில் காயமடைந்தவர்களுக்கு அங்கு முதலுதவிக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அம்புலன்ஸ் வண்டிகள் சிகிச்சை அளித்துள்ளன. ஆனாலும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் களுவாஞ்சிகுடி மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதாக டாக்டர் சுகுணன் தெரிவித்தார்,

இவர்களில் மேலும் மோசமாக முறிவுகள் போன்றவற்றுக்கு உள்ளானவர்கள் 4 பேர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

## மரண அறிவித்தல்




**திரு. ஏரம்பு பசுபதி உரிமையாளர்- இலட்சுமி மரக்காலை ஊர்காவற்றுறை, பெருங்காடு புங்குடுதீவு, முன்னை நாள் தலைவர் புங்/நயி. ப.நோ.கூ.சங்கம்**
**வயது 81**

யாழ். புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு பசுபதி அவர்கள் 20-11-2018 செவ்வாய்க்கிழமை அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற ஏரம்பு, வள்ளியம்மை தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, ரோஸ்மேரி தம்பதிகளின் மருமகனும், எலிசபெத்ராணி அவர்களின் அன்புக் கணவரும், மோகனகுமார்(பிரான்ஸ்), ஸ்ரீகரன்(பிரித்தானியா), கேதீஸ்வரன்(பிரான்ஸ்), மகேந்திரா(நோர்வே), வளர்மதி(நோர்வே), தேவமலர்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பராசக்தி, இலட்சுமி, காலஞ்சென்றவர்களான அமிர்தவல்லி, சிவலிங்கம்(அம்மான்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கஜநிதி(பிரான்ஸ்), பிருந்தா, மைதிலி(பிரான்ஸ்), நகுலேஸ்வரன்(நோர்வே), அன்பழகன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு, பசுபதி, இராசலிங்கம் மற்றும் மகாலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தட்ஷயா, அபினா, அஸ்வினா, அக்ஸனா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும், டேனுஷா, அனுக்ஷா, சதுஷா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியை 25-11-2018 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 11:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தோணிக்கல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

## கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!

இலங்கை அரசியலில் அண்மையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகள் நாட்டு மக்களை மிகவும் மோசமான பொறிக்குள் சிக்கிய நிலைக்குள் தள்ளியுள்ளன.

பொருளாதார, அரசியல் சமூக நிலைமைகளில் நாட்டு மக்கள் எதிர்கொள்கிற நெருக்கடி மிகவும் கடினமானதாக இருக்கின்றது.

இரு கட்சிகளுக்கு இடையிலான ஜனநாயக இழுபறியில், அவர்களின் விட்டுக்கொடுப்பின்மையின் மத்தியில் மக்கள் சிக்கித் தவிக்கிறார்கள். ஆனால், ஊடகங்களின், ஆய்வாளர்களின் அலசல் எல்லாம் ஏதோ ஒரு தரப்புக்கு மாத்திரம் ஜனநாயகம் மறுக்கப்பட்டுவிட்டது என்ற நிலையில் வாதிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மக்களின் நிலை, கடந்த பல காலமாகவே இன்று எதிரெதிர் அணிகளில் இருப்பவர்களின் ஜனநாயக எதிர்ப்பு நடவடிக்கைகளால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வந்திருக்கின்றது என்பதை மறந்து ஆய்வாளர்கள் சிலர் இன்றுதான் இலங்கையில் ஜனநாயகம் சிக்கலில் மாட்டியது என்ற மாதிரி பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

போட்டியில் இருக்கும் இரு தரப்பிலும் மிகுந்த அரசியல் அறிவு மிக்க பலர் இருக்கிறார்கள். இன்றைய நிலையில் இருந்து விடுபடுவதற்கு சுமூகமான வழி ஒன்றை அவர்களும் பிரேரிக்கவில்லை, அதனைக் கேட்கும் நிலையில் அவர்களது அணியினர்கூட இல்லை. இதுதான் இன்றைய அரசியல் நிலவரம்.

இப்படியான இக்கட்டான சூழ்நிலைகளில் மக்களின் நலனை முன்னிறுத்தி, விட்டுக்கொடுத்துச் சிந்திப்பதுதான் அரசியல் அறம். ஆனால், அதற்கு இன்று கோதாவில் நின்று போராடுபவர்களில் எத்தனை பேர் தயார் என்று தெரியவில்லை.

தேவையற்ற இழுபறிகளே கண்முன் தொடர்கின்றன. விரைவில் சுமூகமான நிலை ஏற்படும் என்று எதிர்பார்க்கவும் சிரமமாக இருக்கின்றது.

இன்று, இலங்கை மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்.

**சீவகன் பூபாலரட்ணம்**

# மாவீரர் நாள் நவம்பர் 27 - தமிழர்களின் நடுகல் வழிபாட்டின் பிரதிபலிப்பு



நவம்பர் 27ஆம் நாள் அனுஷ்டிக்கப்படும் விடுதலைப்புலிகள் அமைப்பின் மாவீரர் நாள் நிகழ்வுகள் என்றதும் சிங்கள மக்கள் மற்றும் படைத்தரப்பு மட்டுமல்ல தமிழர்களில் ஒரு சாராரும் அச்சத்துடனேயே பார்க்கும் நிலை காணப்படுகிறது.

போரில் இறந்தவர்களையும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்களையும் தெய்வமாக மதித்து வழிபாடு செய்யும் முறை மானிட வரலாற்றில் தொன்று தொட்டு காணப்படுகிறது.

இதனால் தான் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்' என வள்ளுவர் எடுத்துரைத்திருந்தார்.

தமிழர்களின் வழிபாட்டு முறை கூட இந்த அடிப்படையில் தான் அமைந்திருந்தது.

இதன் அடையாளமாக எழுந்தவைதான் நடுகல் வழிபாடு. இந்த நடுகல்லே நாளடைவில் குலதெய்வ வழிபாடாக மாற்றமடைந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நடுகல் வழிபாடு

சங்க காலம் தொடக்கம் போரில் மரணித்த வீரர்களுக்கு நடுகல் அமைத்து வழிபாடு செய்யப்பட்டதாக புறநானுறு போன்ற வீரம் பற்றி பேசுகின்ற நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

வீரக்கல், நடுகல், நினைவுத்தூண், வீரன்கல், சுமைதாங்கிக் கல் எனப் பல வடிவங்களில் பல வகைகளாக, இறந்து போனவர்களைத் தியாகிகளாகப் போற்றிய வழக்கம் சங்க காலம் முதல் தமிழர்களிடையே நிலவி வந்திருக்கிறது.

மாவீரர் நாள் என்பதும் மாவீரர்களை நினைவு கூர்ந்து நடுகல் அமைத்து வணக்கம் செலுத்தும் முறை தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில் உருவான ஒன்றல்ல. தமிழர்களின் ஆதிகாலம் தொட்டு இருந்து வருகின்ற வழக்கமாகும்.

போரில் அல்லது போரில் வெற்றிபெற நவகண்டம் என்ற பெயரில் மாய்ந்தால், தன் இனத்தைக் காக்க மடிந்தால், ஊரைக் காக்க போராடி இறந்தால், தனது இனத்திற்காக தன்னை மாய்த்துக்கொண்டால் அவர்கள் வழிபாட்டிற்குரியவர்களாக மதிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்.

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு நடுகல் எழுப்பி வழிபட்டதை சிலப்பதிகாரம் சொல்கிறது.

நடுகல் வழிபாடு நம் தமிழர்களின் வாழ்வியல் முறையாக இருந்திருக்கின்றது. வீரர்களுக்கும், மன்னர்களுக்கும் அவர்கள் இறந்தபின் நடுகல் வைத்து வணங்கும் பழக்கம் தமிழர்களிடம் காணப்பட்டது. மதம் என்ற நிறுவனமயம் ஆக்கப்பட்ட அமைப்பு சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்களிடம் இருக்கவில்லை. இயற்கையை தமிழர்கள் வழிபட்டிருக்கின்றனர். ஆனால் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இருக்கின்றது. அதுதான் இயற்கையை, மனித வாழ்க்கையை கட்டுப்படுத்துகின்றது என அவர்கள் நம்பினர்.

தமக்காக போரில் மடிந்து போனவர்களே தமது காவல் தெய்வங்கள் என எண்ணி அவர்களை வழிபட்டு வந்தனர்.

சங்க இலக்கியத்தில் அதியமான், கோப்பெருஞ்சோழன், சோழன் ஆகியோர்களுக்கு நடுகல் இருந்ததாக நாம் பாடல்களின் மூலம் அறிந்து கொள்கின்றோம்.

இறந்தவர்களை புதைக்கும் வழக்கமே ஆதிகால தமிழர்களிடம் காணப்பட்டது. பல்லவர் காலத்தின் பின் வடஇந்திய



மத அனுட்டானங்கள் தமிழர் வழிபாட்டு முறையிலும் வாழ்வியல் முறையிலும் கலந்ததன் விளைவாகவே இறந்தவர்களை எரிக்கும் முறை தமிழர்களிடம் புகுத்தப்பட்டது.

ஆகமமுறையான வழிபாட்டின் தாக்கத்தால் யாழ்ப்பாணத்திலும் இறந்தவர்களை எரிக்கும் முறை பின்பற்றப்பட்ட போதிலும் ஆகமமுறை அல்லாத இயற்கைத்தெய்வ வழிபாட்டு முறை அல்லது சிறுதெய்வ வழிபாட்டு



முறையை பின்பற்றும் மட்டக்களப்பு போன்ற தமிழர் பிரதேசங்களில் இறந்தவர்களை புதைக்கும் வழக்கமே அதிகமாகக் காணப்படுகிறது.

வடஇந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்து மதத்தின் தாக்கம் மட்டக்களப்பில் காணப்படவில்லை என்றே சொல்லலாம். அங்கு கண்ணகி, காளி, திரௌபதி போன்ற வீரப்பெண்களுக்கு கோவில் கட்டி வழிபடும் முறையே பெரும்பாலும் காணப்படுகிறது. இது நடுகல் வழிபாட்டின் ஒரு அங்கமாகவே கருதப்படுகிறது.

போரில் இறந்தவர்களுக்கு வருடத்தில் ஒரு நாளில் வணக்கம் செலுத்தும் முறை இலங்கையில் சிங்கள மக்கள் மத்தியிலும் காணப்படுகிறது. 1971ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதப்போராட்டம் நடத்திய ஜே.வி.பி இயக்கம் தமது பெண் போராளி பிரேமாவதி மனம்பேரி படைகளால் கொல்லப்பட்ட ஏப்ரல் 16ஆம் திகதியை தமது வீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் நாளாக பிரகடனப்படுத்தியிருக்கிறது.

விடுதலைப்புலிகள் மட்டுமன்றி ஏனைய தமிழ் இயக்கங்களும் தமது இறந்த போராளிகளை வீரமக்கள் தினம் என்றும் தியாகிகள் தினம் என்றும் வருடத்தில் ஒரு நாள் அனுஷ்டித்து வருகின்றனர்.

எனினும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து போராடி மடிந்தவர்களுக்கு வணக்கம் செலுத்தும் நவம்பர் 27ஆம் நாளில் தமிழர் தேசம் மட்டுமல்ல சிங்கள தேசமும் மாவீரர்நாளின் பக்கம் தன் கவனத்தை செலுத்த தவறுவதில்லை.

ஆரம்பகாலத்தில் விடுதலைப்புலிகள் இயக்கமும் தமது இறந்த போராளிகளை எரிக்கும் வழக்கத்தையே கொண்டிருந்தனர். 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலத்தில் சயனற் அருந்தி தற்கொலை செய்து கொண்ட குமரப்பா புலேந்திரன் உட்பட 11 போராளிகளின் உடல்களும் வல்வெட்டித்துறை தீருவில் மயானத்தில் எரிக்கப்பட்டது.

இதன் பின்னர் 1988ஆம் ஆண்டுக்கு பின்னரே தமது போராளிகளை புதைக்கும் வழக்கத்தை அவர்கள் ஏற்படுத்திக்கொண்டனர்.

1989ஆம் ஆண்டிலிருந்து நவம்பர் 27ஆம் திகதியை மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் நாளாகவும் விடுதலைப்புலிகள் பிரகடனப்படுத்திக்கொண்டனர்.

இரா.துரைரத்தினம்

தமிழீழ மாவீரர் நாளாக இந்நாளைத் தேர்ந்தெடுத்ததற்கு தமிழீழ போராட்ட வரலாற்றுடன் இணைந்த ஒரு முக்கிய காரணம் உள்ளது. இந்த நாளில்தான் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் முதலாவது போராளியான சங்கர் (செ. சத்தியநாதன்) வீரமரணம் அடைந்தார்.

1988ஆம் ஆண்டின் பின்னர் விடுதலைப்புலிகள் தமது போராளிகளை புதைத்து அதில் நடுகல் அமைப்பதற்கென பிரத்தியேகமான இடங்களையும் அமைத்து கொண்டனர். அவற்றிற்கு மாவீரர் துயிலும் இல்லம் என பெயர் சூட்டப்பட்டது.

வடக்கு கிழக்கில் 33 மாவீரர் துயிலும் இல்லங்கள் இருந்த போதிலும் அவை 2009ஆம் ஆண்டின் பின்னர் அழிக்கப்பட்டு விட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சாட்டி மாவீரர் துயிலுமில்லம், கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம், எல்லங்குளம் மாவீரரதுயிலுமில்லம், கொடிகாமம் மாவீரர்துயிலுமில்லம், உடுத்துறை மாவீரர் துயிலுமில்லம் ஆகியனவும்,

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம். விசுவமடு மாவீரர் துயிலுமில்லம், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லம், முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை மாதுயிலுமில்லம், அலம்பில் மாவீரர் துயிலுமில்லம், ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லம், வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லம், களிக்காடு (நெடுங்கேணி) மாவீரர் துயிலுமில்லம், மணலாறு உதயபீடம் மாவீரர் துயிலுமில்லம், இதயபீடம் மாவீரர்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# பூலாக்காடு தொல்பொருள் சின்னங்கள்: நாகர் வாழ்விட எச்சங்கள்

மட்டக்களப்பின் வடக்கேயமைந்துள்ள வயல்புறக் கிராமமான பூலாக்காட்டில், ஒரு சதுர கிலோமீற்றருக்கும் மேலான விசாலமான பரப்பில் உள்ள மேட்டில் மறைந்து கிடக்கின்ற தொல்பொருள் சின்னங்கள், கிறிஸ்துக்கு முற்பட்ட காலத்தில் மட்டக்களப்பு தேசத்தில் வாழ்ந்த நாகர்களின் பண்பாட்டுச் சின்னங்களாகும் என இப்போது உறுதிபடக் கூறிக்கொள்ளலாம். மட்டக்களப்பில் மிக அண்மைக்காலங்களில் கண்டறியப்பட்ட நாகர்களின் பண்பாட்டுச் சின்னங்களை ஒத்தவகையிலான பல தொல்பொருள் சின்னங்களே இங்கும் காணப்படுகின்றன.

பூலாக்காடு, மட்டக்களப்பின் வடக்கே, கோறளைப்பற்று தெற்குப் பிரதேச செயலகப்பிரிவில் அமைந்துள்ள வயல்புறக் கிராமமாகும். கூகுள் வரைபடத்தில் குறிப்பிடப்படாத மட்டக்களப்புக் கிராமங்களில் இக்கிராமமும் ஒன்று. கிரான் சந்தியிலிருந்து மேற்கே செல்லும் வீதியில் புலிபாய்ந்தகல் சென்று, அங்கிருந்து தென்மேற்கே செல்லும் வீதியில் தவணைக்கண்டத்தினைத் தாண்டிச் சென்றால் வரும் ஊரிது. வட்டிபோட்டமடு, பெண்டுகள்சேனை என்பன அயல் கிராமங்களாகும். அண்மைக்காலங்களில் நாகர்களின் பண்பாட்டுச் சின்னங்கள் கண்டறியப்பட்ட குடும்பிமலைக்குத் தெற்கேயும் இலாவணைக்கு வடக்கேயும் இப்பூலாக்காடு அமைந்துள்ளது.



இவ்வூரில் ஒரு சதுர கிலோமீற்றருக்கும் மேலான விசாலமான பரப்பில் உள்ள மேட்டில் மறைந்து கிடக்கின்ற தொல்பொருள் சின்னங்களில் பெருமளவானவை நிலத்தில் அடிப்பாகம் புதைக்கப்பட்ட கட்டையான கருங்கல் தூண்களாகும். இக் கட்டையான கருங்கல் தூண்கள் தனித்தும் கூட்டமாகவும் காணப்படுகின்றன. பல தேசமடைந்துள்ளன. இவை, இங்கு நிலத்தின் கீழ் ஈமக்கல்லறைகளோ அல்லது ஈமத்தாழிகளோ புதையுண்டிருப்பதற்கான அடையாளங்களாகக் கொள்ளத் தக்கனவாக உள்ளன. எனவே இப்பகுதி பெருங்கற்கால ஈமத்தலம் எனக் கொள்ளமுடிகிறது. இதனை விட நடுவில் சதுர வடிவில் குழி வெட்டப்பட்ட சதுரமான கல்லொன்றையும் காணமுடிந்தது. இது தூண்தாங்கும் கல் எனக்கருத முடிகிறது.

இங்கு மண்ணுள் புதைந்த நிலையில் நாக வடிவில் செதுக்கப்பட்ட கல்லொன்றையும், மண்ணுள் புதைந்த நிலையில் நாக வடிவினை ஒத்த கல்லொன்றையும், தோணிவடிவில் செதுக்கப்பட்ட கட்டையான கருங்கல் தூணையும் காணமுடிகிறது. இவற்றை நாகரின் வழிபாட்டுச் சின்னங்கள் எனக்கருத முடிகிறது.

மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட அண்மைக்கால தொல்லியல் மேலாய்வுகள் மூலம் கிறிஸ்துக்கு முன் மூன்றாம் நூற்றாண்டளவில் நாகரின் குடியேற்றங்கள் மட்டக்களப்பில் பரவியிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு வாழ்ந்த நாகரின் பண்பாட்டம்சங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டம்சங்களாகும். மேலும் மட்டக்களப்பில் நாகரின் ஆட்சியின் கீழமைந்த பதினைந்து வேள்புலங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளன. பூலாக்காட்டில் வெளிப்பட்டுத் தெரியும் தொல்பொருள்களைக் கொண்டு, மிக அண்மைக்காலத்தில் மட்டக்களப்பில் கண்டறியப்பட்ட நாகரின் ஆட்சியின் கீழமைந்த வேள்புலங்களில் இவ்விடமும் ஒன்று எனக்கருத முடிகிறது. இத்தொல்பொருட்கள் மேலும் கவனமாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

மேலும் சில முக்கியத்துவங்களையும் பூலாக்காடு தொல்பொருட்களும் இப்பிரதேசமும் கொண்டுள்ளன. பூலாக்காட்டு தொல்பொருள் காணப்படும் ஒரு சதுர கிலோமீற்றருக்கும் மேலான விசாலமான பரப்பில் உள்ள மேட்டின் மையத்தின் அமைந்துள்ள மண்புட்டியின் கீழ் ஒரு கோயில் மறைந்து கிடைக்கின்றது எனகிறார்கள் ஊர் மக்கள். இதனைப் புதையல் எனக்கருதி தோண்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆனால் தெய்வ அருளால் அம்முயற்சிகள் தடைப்பட்டதாகவும் மக்கள் கூறிக்கொள்கிறார்கள்.

**கிரான் விஜய்**



இம் மேட்டின் அருகமைந்துள்ள வயல்களிலும் பல தொல்பொருள் சின்னங்கள் காணப்படுகின்றன. இவ்வூரின் மேற்கமையுந்துள்ள முறுத்தானையிலும் நிலத்தில் அடிப்பாகம் புதைக்கப்பட்ட கட்டையான கருங்கல் தூண்கள் நான்கை காணலாம். முறுத்தானை நீண்டகாலமாக பழங்குடியினர் வாழும் கிராமமாகும். முறுத்தனைக்கருகிலுள்ள காட்டில் அமைந்துள்ள 'கல்லூடு' செங்கல் கட்டுமானத்தின் சிதைவு எனக்கருதலாம். இது கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திற்குரியது என்பதனை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதற்கப்பால் இப்பிரதேசத்தின் மேற்கமையந்துள்ள காடுகளில் குகைகள் உட்பட பல தொல்லியல் சின்னங்கள் மறைந்து கிடக்கின்றன

# மூதாதையரின் காலடிகள்

## கயல் கொடி மலை

ஈழ வரலாற்றில் தமிழ் நிலமாய் மூத்தோரின் சுவடுகள் ஆழமாக பதிந்துள்ள இடங்களில் ஒன்று.

கட்டைபறிச்சான் சின்னப் பாலத்தை கடந்து பள்ளிக்குடியிருப்புக்கு போகும் பாதையை கடந்து வளம் நிறை வயல்களும் குளங்களும் சூழ பசுமைத் தாயகமாய் நிறைந்திருக்கும் இயற்கை அன்னையின் கொடையாய் கட்டைபறிச்சான் கிராமத்தின் தொன்மையை பறை சாற்றி நிற்கும் மலை.

ஒய்வு கிடைக்கும் போதெல்லாம் கயல்கொடி மலை ஏறி காட்டுப் பழங்களை பறித்துச் சாப்பிடுவது எங்கள் இளமை நாள் வழக்கம். மலை உச்சியிலிருந்து பார்க்கும் போது நம் பார்வை கொட்டியாரம் முழுவதையும் அதன் அழகையும் மேய்ந்து வரும் கொட்டியாரத்தையும் தாண்டி கடல் கடந்து கோணேசர் மலையின் எழிலையும் சுவைக்க முடியும்.



மலைச் சரிவுகளிடையே முதலிப் பழங்கள் குலை குலையாய் பழுக்கும் காலங்கள் எங்கள் கொண்டாட்ட காலம். முதலி எப்போதாவது ஒரு முறை பல வருடங்களுக்கு ஒரு முறை பழுக்கும் அபூர்வ காட்டுப் பழ மரம்.

மனித நாகரிகம் நதிக் கரைகளிலும் மலைக் குகைகளிலும் உருவானதாக தொல்லியல் ஆய்வுகள் நிரூபிக்கின்றன. அந்த வகையில் ஈழத் தமிழர்களின் தொல்லியல் தடங்களின் மிகப் பழமையான இடமாக கயல் கொடி மலையை நாம் அடையாளப் படுத்த முடியும்.

கயல் கொடி மலைக்கு வழமை போல ஏறிக் கொண்டிருந்த ஒரு நாளில் அந்த அதிசயத்தை கண்டோம். மலைச் சரிவிடையே முதலிப் பழம் பழுத்த ஒரு நாளில் பழம் ஆயச் சென்ற போது குன்றாய் நிமிர்ந்திருந்த ஒரு பாறையும் அதன் ஓரம் ஒரு சிறு குகையும் அந்த குகையின் விதானமாய் பரந்திருந்த பாறை முகமும் அந்த பாறை முகத்தில் நாம் அந்த நாட்களில் அறியாத எழுத்துக்களும் கல் படுக்கைகளுமாய் பழங்கால மனிதர்கள் வாழ்ந்த இடமாய் அந்த இடம் .

"பரு மக திச புத சக சங்கமய லெனே"

பின்னாளில் நான் பல்கலைக் கழகம் சென்று தமிழை சிறப்பு பாடமாக படித்த போது தொல்பொருளியல் எனும் சிறப்பு பாடம் இருந்தது. பேராசிரியர் இந்திரபாலா தொல்லியல் எழுத்துகள் பற்றி கற்பித்தார். அந்த எழுத்துக்கள் கயல் கொடி மலை எழுத்துக்களை ஒத்திருந்தன. நான் மகிழ்ச்சியில் உச்சத்தில் நின்றேன் நான் பிறந்த நிலம் தொன்மை வாய்ந்தது என பெருமை கொள்ள வைத்தது.

இது பற்றி பேராசிரியர் இந்திரபாலா அப்போது மிகுந்த அக்கறை கொண்டு கயல்கொடி மலைக்கு எங்களோடு வந்து அக் கல்வெட்டை படியெடுத்து அது பற்றிய தொல்லியல் விளக்கத்தை தந்தார். அதன்படி இக் கல்வெட்டு கி.மு இரண்டாம் நூற்றாண்டுக்கு உரியது தமிழ் பிராமி எழுத்துக்கள் என்பதையும் நிருபித்தார். இதில் சிறப்பு என்னவெனில் தமிழ் பிராமிக்குரிய ம வடிவம் இருப்பது.

**பாலசுகுமார் சேனையூர்**
**மேனாள் முதன்மையர்**
**கலை கலாசார பீடம்**
**கிழக்குப் பல்கலைக் கழகம்**

இதன் காலத்தை குறிப்பிட்ட பேராசிரியர் இதன் பொருண்மையை புரிய வைத்தார். கிறிஸ்து சகாப்த காலகட்டத்தில் தமிழ் பௌத்தம் செழித்திருந்த போது துறவிகளுக்கு இங்கிருக்கும் குகையை கையளித்த குறிப்பாய் இருக்கலாம் என குறிப்பிட்டார்.

பின்னைய நாட்களில் இக் கல்வெட்டை தமிழ் நாட்டு தொல்லியல் ஆய்வாளர்களுடன் தொடர்பு கொண்டு சில கருத்துக்களை முன் வைத்துள்ளனர் தமிழ் வணிக குழுக்களுடன் தொடர்பு பட்டிருக்கலாம் என உறுதிப் படுத்துகின்றனர்.

தொல்லியல் ஆய்வாளர் தங்கேஸ்வரி “பரு மக” என்பதை முருக வழிபாடோடு

தொடர்ச்சி... (பக்கம் -11 )

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்
மற்றும் வாழ்நாள் நன்கொடையாளர் சக்தி இல்லம்.

## இரு கிராமங்களுக்கு தண்ணீரில் கண்டம்



கடுக்காமுனை ஆகிய பகுதிகளிலிருந்து இக்கிராமத்திற்கான போக்குவரத்து இணைக்கப்பட்டுள்ளது. குடிப்பதற்கான நீர் உகந்த நிலையில் இல்லாத இக்கிராமங்களில், குடிநீரினைப் பெற்றுக்கொள்வதில் இற்றைவரை இப்பகுதி மக்கள் சிரமங்களையே எதிர்கொண்டு வருகின்றனர்.

'மாரி காலம் ஆரம்பித்தால் பண்டாரியாவெளி, படையாண்டவெளி கிராம மக்கள் இடம்பெயர ஆரம்பிப்பர்' என கணேசன் இராமசாமியுடன் பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலய முன்றலில் நின்று கூறிக்கொண்டிருந்தான்.

மட்டக்களப்பு மாவட்டத்தில், மண்முனை தென்மேற்கு பிரதேசத்தில் கிராமங்களாக பண்டாரியாவெளி, படையாண்டவெளி கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்கள் அமைந்துள்ள சூழல் இயற்கையானது. கிராமத்தின் ஒரு பகுதியில் வாவியும், ஏனைய பக்கங்களில் குளங்களும், நெற்செய்கை வயல்நிலங்களும் அமைந்துள்ளன. இக்கிராமங்களில் 463 குடும்பங்களைச் சேர்ந்த 1673 பேர் வாழ்கின்றனர். பண்டாரியாவெளிக் கிராமத்தில் தரம் 9 வரையான வகுப்புக்களுடன் நாமகள் வித்தியாலயம் என்ற பெயருடன் பாடசாலையொன்றும், படையாண்டவெளிக் கிராமத்தில் தரம் 5வரையான வகுப்புக்களுடன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்ற பெயருடன் வித்தியாலயமொன்றும் அமைந்துள்ளன. மக்களின் இறைவழிபாட்டிற்காக இந்து ஆலயங்களும், மாணவர்களின் கற்றலை மேம்படுத்திக்கொள்வதற்காக வாசிகசாலையும், விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு விளையாட்டு மைதானமும், பாலர்களின் கல்வியை மேம்படுத்துவதற்காக பாலர் பாடசாலையும் அமைந்துள்ளன.

இங்குள்ள மக்கள் விவசாயம், மீன்பிடி, கூலிவேலை மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் வேலை செய்து குடும்பச்சுமைகளை ஈடுசெய்தும் வருகின்றனர். இக்கிராமங்களுக்கும் ஏனைய கிராமங்களுக்கும் உள்ள இடைவெளிகளாக நெற்செய்கை வயல்நிலங்கள் காணப்படுகின்ற அதேவேளை மகிழடித்தீவு, அரசடித்தீவு, தண்ணீரில் கண்டம் கொண்ட கிராமமாகவே பண்டாரியாவெளி, படையாண்டவெளி கிராமங்களினை பார்க்க நேரிடுகின்றது. வருடமும் முழுவதும் கிராமத்திலே குடிப்பதற்கு உகந்த நீரினை பெற்றுக்கொள்ள முடியாத நிலை, வருடம் நிறைவிலே நீருக்குள் கிராமம் மூழ்கும் நிலையென இரண்டுபக்கமாகவும் நீரினால் இன்னலை எதிர்நோக்கி இருக்கின்றன இந்த இருகிராமங்களும். கிராமத்திற்கும், வாவிக்கும் உள்ள தூரம் மிகக்குறுகியது. மழை காலங்களில் பெய்கின்ற மழை நீர், எல்லாக்கிராமங்களிலும் இருந்து வடிந்து மட்டக்களப்பு மண்ணினை இருபகுதிகளாகப்பிரிக்கின்ற வாவியினிலே கலந்து, பின் முகத்துவாரத்தின் ஊடாக கடலை அடைகின்றது. இவ்வாறான வாவிப்பகுதியில் ஒருபகுதியினை பண்டாரியாவெளி, படையாண்டவெளி கிராமம் கொண்டுள்ளது. இதனால் வாவியில் நீர் அதிகரித்து அந்நீர் இருகிராமங்களுக்குள்ளும் உள்நுழைகின்றன. அதேவேளை இருகிராமங்களிலும் சிறுசிறு குளங்களும் அமைந்துள்ளன. அக்குளத்து நீரும் வீடுகளுக்குள் ஊடறுக்கின்றன. இதைவிடவும் இப்பகுதியில் உள்ள கடுக்காமுனை குளத்து வான்கதவுகளும் இக்கிராமங்களை நோக்கியவாறு உள்ளமையினால், இக்கிராமத்திற்குள் இக்குளத்து நீரும் உள்வருகின்றது. இதனால் கடுக்காமுனை – பண்டாரியாவெளி, அரசடித்தீவு – பண்டாரியாவெளி, மகிழடித்தீவு – படையாண்டாவெளி கிராமங்களுக்கான தரைவழி போக்குவரத்தும் தடைப்பட்டுவிடும். இதன் காரணமாக இப்பகுதி மக்கள் தமக்கான பொருட்கள், சேவைகளை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமை கடந்த கால அனுபவங்களே என்றார் கணேசன்.

போக்குவரத்து தடைப்பட்டு, வெள்ளநீரும் வீட்டுக்குள் நுழைந்தால் இக்கிராமத்து மக்கள் எங்கே செல்வதென்ற வினாவினை தொடுத்தான் இராமசாமி, பதிலளிக்க ஆரம்பித்த கணேசன், இங்குள்ள மக்கள் இடம்பெயர்ந்து குடியமரும் இடமாக அண்மையில் உள்ள அரசடித்தீவுப் பாடசாலையே அமைவது வழக்கமானதொன்று. இப்பாடசாலையிலே மக்கள் தற்காலிகமாக இடம்பெயர்ந்து அமர்ந்து கொள்வதுடன், வெள்ளநீர் வழிந்தோடியதும் வீடுகளுக்குச் சென்றடைவர். மக்கள் இடம்பெயர்வது ஒருபுறமிருக்க அவர்களது முக்கிய பொருட்களையும் கொண்டுசெல்ல வேண்டியேற்படுமே, இவ்விடயத்தினை எவ்வாறு மேற்கொள்கின்றனர் என்ற வினாவினை தொடுத்த இராமசாமியினை நோக்கி, அனுபவத்தினை கூற ஆரம்பித்த கணேசன், வீட்டில் உள்ள எல்லாப்பொருட்களையும் கொண்டு செல்வதென்பது மிகவும் கடினமானதொன்றே. ஆனாலும் வருடாந்தம் இந்நிலைமைகளுக்கு உள்ளாகின்றமையினால், முக்கிய பொருட்களை எமது கைகளிலே கொண்டு சென்று விடுகின்றோம். சிலவற்றினை அதிக உயரத்தில் வைத்துவிட்டு செல்லுகின்றோம். ஆனாலும் உடம்பு மாத்திரமே தற்காலிக இடத்தில், உயிர் எமது வீட்டிலே என்றார்.

வருடாந்தம் எமது பகுதியில் மாரிகாலத்தில் மழைபெய்வது வழமையானதொன்றே. இதனால் வெள்ளநீர் அதிகரித்து ஊருக்குள் நுழைவதும் பழகிப்போனதொன்று இதற்கான நிரந்தர தீர்வு இன்னமும் காணப்படவில்லை. வீடுகளை உயரமாக கட்டுவதன் மூலமாக வெள்ள நீர்களிலிருந்து தம்மை பாதுகாத்து இருக்கமுடியும். அல்லது, இங்குள்ள பாடசாலை கட்டிடங்களை இருமாடிக்கட்டிடமாக கட்டுவதன் மூலம் மேல்பகுதியில் தங்குவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ள முடியும்.

ஆனாலும் போக்குவரத்துக்கள் தடைப்படுவதினால், தமக்கான உணவுப்பொருட்களை பெற்றுக் கொள்வதிலே இங்குள்ள மக்கள் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும்;. இதற்காக வீதிகளையும் உயரமாக அமைக்க வேண்டும்.

இதன் மூலமாக பாரிய வெள்ளத்திலிருந்து அன்றி குறைவான வெள்ளத்திலிருந்து தங்களை இங்குள்ள மக்கள் பாதுகாத்துக்கொள்ள முடியும். ஒவ்வொருவருடமும் மழை பெய்தாலும், பாரிய வெள்ளங்கள் ஒவ்வொரு வருடமும் ஏற்படுவதில்லை. ஆயினும் சிறிய மழைக்கும் இடம்பெயரநேரிடும் நிலையிலிருந்து மக்களை காப்பதற்கு நிரந்தர தீர்வுகள் எட்டப்பட வேண்டும் என்பதே கணேசனின் எண்ணமுமாகும்.

**படுவான் பாலகன்**

## எஸ்.எம்.ஜியின் முதலாவது ஆண்டு நினைவு அஞ்சலி



இலங்கைத் தமிழரின் வரலாற்றில் பத்திரிகை ஜாம்பவானாகத் திகழ்ந்த கோபு என அழைக்கப்பட்ட எம். எம். கோபாலரெத்தினத்தின் (எஸ்.எம். ஜி) முதலாவது ஆண்டு நினைவு நிகழ்வையொட்டி கள்ளியங்காடு சேமக்காலையில் அவரது உடலம் அடக்கப்பட்டிருக்கும் இடத்தில் கடந்த வியாழக்கிழமை (15) மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

ஈழமுரசு, ஈழநாதம், வீரகேசரி உள்ளிட்ட பல பத்திரிகையில் பத்திரிகையாளராகக் கடமையாற்றிய, நாடறிந்த ஊடகவியலாளர் கோபுவின் சமாதிக்கு உறவினர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

வீரகேசரி பத்திரிகையில் ஒப்புநோக்குநராக தமது பத்திரிகையைப் பணியை ஆரம்பித்த இவர் அங்கு உதவி ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றார். அங்கு நடைபெற்ற வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து பணியிலிருந்து விலக நேர்ந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான முதல் தமிழ் நாளேடான ஈழ நாடு, காலைக்கதிர் (அரியலையைச் சேர்ந்த திரு நீலகண்டர் என்பவரால் வெளியிடப்பட்டது) செய்திக் கதிர், ஈழமுரசு, ஈழநாதம், மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த தினக்கதிர் முதலானவற்றின் ஆசிரியராக விளங்கினார்.

'யாழ் மண்ணில் இந்தியச் சிறை' எனும் தலைப்பில் தனது இரு மாதகாலமாக சிறை அனுபவங்களை அவர் நூலாக எழுதி வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# கலித்தொகை இன்பம்

## தந்தையைப்போல, மகனே நீ தவறுகள் செய்யாதே!

செங்கோல் தவறாது முறைசெய்து மக்களைக் காக்கும் மன்னன் அவன். அவனது மனைவி - பட்டத்தரசி - மிகவும் அழகானவள். அரசன், அரசியுடன் அன்பாகவும், இல்லற வாழ்வில் இன்பமாகவுமே இருந்தான். ஆனாலும் அவனுக்குப் பிறமங்கையரோடும் தொடர்பு இருந்தது. அரசோச்சுவதில் நல்லவனாகத் திகழ்ந்த அவன் காமக்களியாட்டத்திலும் வல்லவனாகவே இருந்தான். அரசனுக்கும் அரசிக்கும் ஓர் ஆண்குழந்தை பிறந்தது. அதற்குப் பின்னரும் மனைவியை விட்டுவிட்டு, மற்றைய பெண்களுடன் உல்லாசமாக இருக்கும் அவனின் வழக்கம் தொடர்கிறது. குழந்தை வளர்ந்த சிறுவனாகின்றது. ஒருநாள் தாயும் மகனும் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். தாயின் மடியில் தாவி அமர்வதும், வெளியே ஓடிச்சென்று குதிப்பதுமாக அந்தச் சிறுவன் விளையாடிக்கொண்டிருக்கின்றான்.



கால்களிலே அவன் அணிந்திருக்கும் சதங்கைகள் கணீர் கணீர் என் ஒலியெழுப்புகின்றன. அவன் விளையாடும் அழகை ஆசையோடு இரசித்தபடி தாய் அமர்ந்திருக்கிறாள். அவன் பொம்மை யானைகளை இழுத்து மகிழ்ந்துகொண்டிருக்கின்றான். அப்போது அங்கே மங்கையர்கள் விளையாடும் களத்தினை உழக்குகின்றான். அவர்களின் விளையாட்டு அடையாளங்கள் அவனது கால்பட்டுச் சிதைகின்றன. மகனை விளையாடவிட்டு மகிழ்ந்துகொண்டிருக்கும் தாய் விளையாட்டுக்கு இடையே அவனுக்கு அறிவுரைகளைச் சொல்கின்றாள்.

“மகனே! என் அன்பு மகனே! போர்யானைக்கு ஒப்பான வீரனே! நான் சொல்வதைக் கேள். அழகிலே நீ உனது அப்பாவைப்போல விளங்கவேண்டும். ஆனால், எல்லா விடயங்களிலும் நீ அவரைப்போல இருக்கக்கூடாது. பக்கச் சார்பின்றி, நீதி தவறாது செங்கோல் ஓச்சுவதிலே அவரைப்போல இருக்க வேண்டும். மங்கையரை நாடுகின்ற அவரது குணத்தை மட்டும் நீ கைக்கொள்ளாதே. களத்திலே எதிரிகளை வெற்றிகொள்ளும் வீரத்திலே நீ அவரோடு ஒன்றுபடு. ஆனால் மனத்திலே நான் இருக்கும்போது என்னைத் தவிக்க விட்டு மற்றைய பெண்களிடம் செல்லுகின்ற குணத்திலே நீ வேறுபடு. தன்னை நாடி வருபவர்களுக்கு வாரி வழங்கும் அவரது வள்ளல் தன்மையை நீ பின்பற்று. ஆனால், தன்னைக் காதலித்து மணந்துகொண்டவளை நோகச்செய்து துன்பத்தில் வாடவிடுகின்ற அவரது செய்கையை நீ கைக்கொள்ளாதே” என்றெல்லாம் மகனுக்கு தாய் அறிவுரை சொல்லிக்கொண்டிரக்கும்போது, மன்னன் - அவளின் கணவன் - அங்கே வருகின்றான். தந்தையைக் கண்டதும் சிறுவன் அவரைப்பார்த்துச் சிரிக்கிறான். அதைக்கண்ட தாய் முறைக்கிறாள். இவ்வளவு நேரமும் நான் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறேன், இவன் இப்போது என்ன செய்கிறான் என்று முணுமுணுக்கிறாள். மகனை இழுத்துத் தன்னோடு இறுக அணைத்து வைத்துக் கொள்கிறாள். மன்னன் அவளைப்பார்த்து, “அன்பான அழகியே. இங்கே பார். வேறு யாரிடமும் எனது உள்ளத்தைக் கொடுக்காதவன் நான். அப்படிப்பட்ட என்மேல் என்ன பிழை கண்டாய்? அவனைப்பிடித்துக் கொண்டிராமல் விட்டுவிடு. அவனை என்னிடம் வருவதற்கு விடு. அவனை நான் தூக்கி அணைத்து மகிழ வேண்டும்.” தந்தை இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும்போதே, தாயிடமிருந்து திமிறித் தன்னை விடுவித்துக்கொண்ட மகன் தந்தையிடம் தாவியோடுகிறான். இப்போது தந்தையின் மார்பிலே அவன் தவள்கிறான்.

தாய்க்குக் கோபம் வருகின்றது. உண்மையிலே அது கோபமல்ல கணவனோடு கொண்ட ஊடல்தான்! “அட இங்கே பார்! நீ அவரிடம் போகாதே என்று நான் எவ்வளவு தடுத்தும்கூட, இவன் என்னைவிட்டுவிட்டுத் தாவியோடி அவரின் மார்பில் ஏறிவிட்டானே. அது சரி! என்னிடம் அன்பில்லாதவர் பெற்ற மகன்தானே இவன். இவன் மட்டும் எப்படி என்மேல் அன்பு காட்டுவான். தந்தையைப் போலத்தானே பிள்ளையும் இருப்பான்” என்று கணவனுக்குக் கேட்கும்படி கூறுகின்றாள். கணவனோடு ஊடுகின்றாள். பின்னர் கணவனின் அணைப்பை நாடுகின்றாள். அவனோடு கூடுகின்றாள். இந்தக்காட்சியை எடுத்தியம்பும் பாடல் வருமாறு:

பாடல்:

மைபடு சென்னி மழகளிற்று ஓடைபோல்
கைபுனை முக்காழ் கயந்தலைத் தாழப்
பொலஞ்செய் மழுவொடு வாள் அணிகொண்ட நலங்கிளர் ஒண் பூண்
நனைத்தரும் அவ்வாய் கலந்துகண்
நோக்குஆரக் காண்பின் துகிர்மேல்
பொலம்புனை செம்பாகம் போர்கொண்
டிமைப்பக் கடிஅரணம் பாயாநின்
கைபுனைவேழம் தொடியோர் மணலின்
உழக்கி அடியார்ந்த தேரைவாய்க்
கிண்கிணி ஆர்ப்ப இயலும்என்
போர்யானை வந்தீக ஈங்கு!
செம்மால்! வனப்பெல்லாம் நுந்தையை
ஒப்பினும் நுந்தை நிலைப்பாலுள்
ஒத்தகுறிஎன் வாய்க்கேட்டு ஒத்தி

கன்றிய தெவ்வர்க் கடந்த களம்கொள்ளும்
வென்றிமாட்டு ஒத்தி, பெரும!
மற்று ஒவ்வாதி ஒன்றினோம்யாம்
என்று உணர்ந்தாரை நுந்தைபோல்
மென்தோள் நெகிழவிடல் பால்கொளல்
இன்றிப் பகல்போல் முறைக்கு ஒல்கா
கோல்செம்மை ஒத்தி பெரும! மற்று
ஒவ்வாதி கால்பொரு பூவின் கவின்வாட
நுந்தைபோல் சால்பு ஆய்ந்தார் சாயவிடல்
வீதல் அறியா விழுப்பொருள் நச்சியார்க்கு
ஈதல்மாட்டு ஒத்தி, பொரும! மற்று ஒவ்வாதி
மாதர்மென் நோக்கின் மகளிரை
நுந்தைபோல் நோய்கூர நோக்காய் விடல்
ஆங்க, திறன் அல்ல யாம் கழற, யாரை
நகும், இம் மகன் அல்லான் பெற்ற மகன்?
மறைநின்று தாம் மன்ற வந்தீத் தனர்
ஆயிழாய்! தாவாத எற்குத் தவறுண்டோ?
காவாது ஈங்கு ஈத்தை இவனையாம்
கோடற்குச் சீத்தை யாம் கன்றி அதனைக்
கடியவும் கைநீவிக் குன்ற இறுவரைக்
கோண்மா இவர்ந்தாங்குத்
தந்தை வியன்மார்பில் பாய்ந்தான் அறன்
இல்லா அன்பிலி பெற்ற மகன்!

(கலித்தொகை, மருதக்கலி பாடல் இல: 21
பாடியவர்: மருதன் இளநாகனார்)

இதன் நேரடிக்கருத்து:

இளம் யானையின் கழுத்திலே தொங்குகின்ற மலர் வடத்தைப்போல உனது மென்மையான தலையிலும் மூவடக்கோவை தொங்குகிறது. வாளும், மழுவும் இடப இலச்சினையோடு அமைந்தவாறு நீ கழுத்திலே அணிந்துள்ள அணியை உனது வாயிலிருந்து வடிந்துகொண்டிருக்கும் நீர் நனைக்கின்றது. அந்த அழகிலே உள்ளம் ஒன்றியவளாக என் ஆசை தீர உன்னைப் பார்ப்பேன். யானைகள் இரண்டு போரிடுவதைப்போலப் பவள உருளையின் மேல் அமைத்துச் செய்யப்பட்ட பொம்மை யானையை இழுத்து நீ விளையாடிக்கொண்டிருக்கின்றாய். வளையல்கள் அணிந்த பெண்கள் விளையாடும்போது அவர்கள் நிலத்திலிட்ட அடையாளங்களை காலால் உழக்கிச் சிதைத்துக்கொண்டு, அந்தக்கால்களிலே அணிந்துள்ள தேரையின் வாய்போன்ற சதங்கைகள் ஒலியெழுப்ப நடந்துவந்துகொண்டிருக்கும் என் மகனே! போர்யானையை ஒத்த வீரனே, இங்கே வா!

செம்மலே! அழகிலே நீ உன் தந்தையைப் போல இருந்தாலும், உனது தந்தையின் செய்கைகளிலே உனக்கு ஏற்றவை எவை என்பதை என்னிடம் கேட்டறிந்து அவைகளில் மட்டுமே நீ அவரைப்போல இருக்கவேண்டும். கோபங்கொண்டு வருகின்ற பகைவரைப் போர்க்களத்திலே எதிர்கொண்டு வெற்றிபெறுவதில் அவரைப்போலவே நீயும் இருப்பாயாக. ஆனால்,

பெருமைக்குரியவனே! அவரோடு ஒன்றுகலந்துவிட்டோம் என்று உணர்ந்தவர்களின் தோள்கள் மெலிந்து துன்பமடையுமாறு அவர்களைக் கைவிட்டுச் செல்வதிலே நீ உன் தந்தையைப் போல் இருக்காதே.

ஒருபக்கம் சாராமல், கதிரவனைப்போல நீதிதவறாது செம்மையாக ஆட்சிசெய்வதிலே நீ அவரைப்போலவே விளங்கு. ஆனால், ஒழுக்கத்தில் சிறந்த மனைவியை காற்றினால் உதிர்ந்த மலர்களைப்போல, வாடி வதங்கவிட்டுப் பரத்தையரிடம் செல்லுகின்ற தன்மையிலே நீ அவரை ஒத்திருக்காதே.

தன்னை விரும்பி வந்தவர்களுக்கு அழிவற்ற உயர்ந்த பொருட்களை வழங்குவதில் நீ தந்தையைப்போலவே விளங்கு. ஆனால் பெருமைக்குரிய

சட்டத்தரணி, பாடும்மீன்
சு.ஸ்ரீகந்தராசா

என் மகனே! உன்தந்தையைப்போல, காதலித்த மென்மையான மங்கையரைத் துன்பத்திலே வாடவிட்டுச் செல்கின்ற செய்கையினை மட்டும் நீ செய்யாதே.

திறன் அல்லாத செயல்களைச் செய்யாதே என்று நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன், அப்படியிருந்தும், மகன் இல்லாதவன் பெற்ற இந்த மகன் யாரைப்பார்த்துச் சிரிக்கிறான்?

(தந்தை சொல்கிறார்)அழகுள்ளவளே! மற்றவர்களிடம் மனதை அலையவிடாத என்னிடம் ஏதாவது தவறு உள்ளதா? மகனைப் பிடித்துக்கொண்டிராமல் அவனை என்னிடம் வருவதற்கு விட்டுவிடு.

இவனொரு கீழ்மகன். “உனது தந்தையிடம் நீ செல்லக்கூடாது” என்று நான் தடுத்தும் கேட்காமல், எனது கைகளை உதறித்தள்ளிவிட்டு மலைச்சாரலை நோக்கிச் சிங்கக்குட்டி பாய்ந்தோடுவதுபோல, தன் தந்தையின் அகன்ற மார்பைநோக்கி ஓடிச் சென்றுவிட்டானே, என்னிலே அன்பில்லாதவன் பெற்ற இந்த மகன்!




# மட்டக்களப்பு மழைக்கு: மரவள்ளி பொரியலும் மாட்டிறைச்சி சூப்பும்

## ஃபை ஸ்டார் ஹொட்டலிலும் கிடைக்காத சுவை

சிவச்சந்திரன் சிவஞானம்

எதிர்பாராதவிதமா மழையில் நனைந்துவிட்டீர்கள், ஏதும் சாப்பிட்டால் குளிருக்கு நல்லா இருக்குமே என்று நினைக்கும்போது, மனதில் என்னென்ன சாப்பாடுகள் வரும்?
இஞ்சிப்பிளேன்டி, வடை என லிஸ்ட் நீளும். ஆனால் மட்டக்களப்பானுக்கு முதலில் ஞாபகம் வருவது மரவள்ளிக்கிழங்கு.

மரவள்ளிகிழங்கை ரசிச்சு பொரிப்பதற்கும், ரசிச்சுச் சாப்பிடுவதற்கும் மட்டக்களப்பாரை யாரும் அடிச்சுக்கொள்ள முடியாது.



எங்கள் பள்ளிக்கூட நாட்களை பசுமையாக்கியதில் மரவள்ளிப் பொரியலுக்கும் பெரிய பங்கு இருக்கின்றது.

மரவள்ளிப்பொரியல் என்றதும் சிறு துண்டுகளாக வெட்டப்பட்ட “சிப்ஸ்” என்று நினைத்துவிடாதீர்கள்.
மரவள்ளி பொரிப்பது ஒரு கலை.

பெரிய துண்டுகளாக வெட்டி, மஞ்சளில் குளிப்பாட்டி, பெரியசட்டி நிறைய எண்ணெயை கொதிக்கவைத்து அதிலே மரவள்ளியை பதமாக வாட்டி எடுக்க வேண்டும். பெரிய துண்டுகளின் வெளிப்புறம் மட்டுமே பொரித்தது போல இருக்கும், அதை நசித்து விட்டால் உள்ளே பொரித்ததற்கும் அவித்ததிற்கும் இடைப்பட்ட பதத்தில் இருக்கவேண்டும். பொரித்த பின்பும் கிழங்கின் வெளிப்புறம் மஞ்சள் கலந்து தங்கம் போல பளபளக்கவேண்டும்.

அந்தத் துண்டுகளை நசித்துப்போட்டு, தூளும், புளிக்கரைசலும் கலந்து ஒரு மூடிய பாத்திரத்துக்குள் போட்டு ஒரு குலுக்குக் குலுக்கி விட்டால் மரவள்ளிப்பொரியல் டிஷ் ரெடி. அப்படியே ஒவ்வொரு துண்டாக எடுத்து வாய்க்குள்



வைக்க அது தானாக கரைந்து போகும்.

பின்னேரம் விளையாடிவிட்டு அல்லது வகுப்புக்கள் முடிந்த பின் நண்பர்களாக சேர்ந்து ஏதாவது ஒரு மரவள்ளிப்பொரியல் கடையில் கூடிவிடுவோம். இந்தக்கடைகள் சாதாரணமாக குடிசை வீடுகளில் இருப்பவர்களின் வீட்டுக்கு வெளிப்புறமாக இருக்கும் சின்ன ஓலைக்கொட்டகையாக இருக்கும்.

ஓலைக்கொட்டகையும் பொரித்த மரவள்ளியை வைக்க மட்டுமே. இருந்து சாப்பிடுவதெல்லாம் வெளியில் இருக்கும் வாங்கில்தான்.

நாங்கள் போகின்ற கடையைத் தீர்மானிப்பதில் இரண்டு விடயம் முக்கிய பங்கு வகிக்கும். பொரியல் எந்தநேரமும் சூடாக ஆவி பறந்து கொண்டு இருக்க வேண்டும் கலக்கின்ற தூள் சுவையானதாக இருக்க வேண்டும். அநேகமாக கூனி கலந்த தூள் போடுபவர்களின் கடைகளுக்கே செல்வோம். ஒவ்வொரு கஸ்டமருக்கும் அநேகமாக சட்டியில் இருந்து இறக்கியவுடன் பிரெஷாகவே கொடுப்பார்கள். ஆறிப்போனது கொடுத்தால் அடுத்த கடைக்குப்போய்விடுவோம் என்பதால் எப்போதும் சூடாக கிடைப்பது உறுதி. 2000 ஆண்டளவில் 50 ரூபாய் இருந்தால் 5 பேர் சாதாரணமாக சாப்பிட்டு விட்டு வரலாம்.

### மாட்டிறைச்சி சூப்

கொஞ்சம் விசேடமான பார்ட்டி என்றால், மாட்டிறைச்சிச் சூப் உடன் மரவள்ளிப்பொரியல் வேட்டை



தொடர்ச்சி... (பக்கம் -15 )

# மட்டு மாநகர சபை

## ‘பசுமை நகர்வு’’ -- கழிவுப் பொருள் மீள் பயன்பாட்டு விழிப்புணர்வுபற்றிய கண்காட்சியும் விற்பனையும்கி




சமகாலத்தில் சவாலுக்குரியதாக மாறிவரும் பிளாஸ்டிக், பொலித்தீன் கழிவுகள், திண்மக் கழிவுகளை மீள் பாவனைக்குட்படுத்தி சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் “பசுமை நகர்வு” என்ற தொனிப் பொருளில் கண்காட்சியும் விற்பனையும் விழிப்புணர்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு விஷேட தேவைக்கு உட்பட்ட சிறுவர்களுக்கான உதவு ஊக்க நிலையம் மென்கபெப் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மயில்வாகனம் வீதி, நாவற்கேணியில் அமைந்துள்ள மேற்படி உதவு ஊக்கப் பாடசாலையில் வெள்ளிக்கிழமை 23.11.2018 காலை 9 மணிக்கு இக்கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மென்கபெப் இணை இஸ்தாபகரான ரஞ்சி ஸ்டப்ஸ் தலைமையில் இடம்பெறும் இக்கண்காட்சியை மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராசா சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

ஆர்வமுள்ள பொதுமக்கள் அனைவரும் கண்காட்சியில் பங்கபற்றி மீள் பாவினை உற்பத்திப் பொருட்களைப் பார்வைட்டு பசுமைச் சூழலுக்கான நகர்வை நோக்கிய அணியில் இணைந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளார்கள்.

இதன்மூலம் கிடைக்கப்பெறும் விழிப்புணர்வைக் கொண்டு வீட்டில், அலுவலகத்தில், சுற்றாடலில் பெருகும் பொலித்தீன் பிளாஸ்டிக், திண்மக் கழிவுப் பொருட்களை சூழலுக்கு இசைந்ததாக பயனுள்ளதாக மாற்றிக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இது மட்டக்களப்பு போன்ற மாநகரங்களில் சுற்றாடலை மிகவும் சிறப்பாகப் பேணவும் உதவும். விஷேட தேவைக்கு உட்பட்ட சிறுவர்கள், அவர்களின் பெற்றோர், மாற்றுத்திறனாளி ஊக்குவிப்பு போதனாசிரியர்கள் ஆகியோரால் கழிவுப் பொருட்களைக் கொண்டு நேர்த்தியாகச் செய்து முடிக்கப்பட்ட அழகிய கைவேலைப்பாடுகள் நிறைந்த பல மீள் பாவனைப் பொருட்கள் கண்காட்சியிலும் விற்பனையிலும் இடம்பிடித்துள்ளன என்று மென்கபெப் மட்டக்களப்பு ஊக்க உதவிப் பாடசாலையின் முகாமையாளர் எஸ்.பி. பிரசன்யா தெரிவித்தார்.

திண்மக் கழிவுப் பொருட்கைளை எங்கு கொண்டு போய்க் குவிக்கலாம் என்று தடுமாறிக் கொண்டிருக்கும் வேளையில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது சிறப்பம்சம் என்றும் அவர் மேலும் கூறினார்.

**லியோண்**

## மாநகர சபைக்கான இலத்திரனியல் அடிப்படையிலான குடிமக்கள் கருத்து அறிதல்




ஆசிய அபிவிருத்தி மன்றம் இலங்கையின் முக்கிய உள்ளூராட்சி சபைகளின் பொதுச் சேவைகள் குறித்த பொதுமக்கள் கருத்தை அறியும் முக்கிய திட்டம் ஒன்றை நடத்த உதவி வருகின்றது.

அந்தத் திட்டத்தின் கீழ், மட்டக்களப்பு மாநகர சபையின் பொதுச் சேவைகள் குறித்த மக்கள் கருத்தறியும் திட்டம் ஒன்றுக்கு அது நிதியுதவியும், தொழில்நுட்ப உதவியும் வழங்கி வருகின்றது.

அந்தத் திட்டத்தின்படி, மாநகர எல்லைக்குள் அதன் சேவைகளைப் பெறும் மக்களின் கருத்துக்கள் “இலத்திரனியல் பொதுமக்கள் கருத்து அட்டை” என்னும் அன்ரொயிட் செயலியின் உதவியுடன் சேகரிக்கப்படும். அதனை அடிப்படையாகக் கொண்டே இனிமேல் மாநகர சபை தனது வேலைத்திட்டங்களுக்கான வரவு செலவு ஒதுக்கீடுகளை திட்டமிடும் என்றார் ஆசிய மன்றத்தின் தொழில்நுட்ப ஆலோசகரான எஸ். சி. சசிகரன்.

பக்கசார்பை தவிர்ப்பதற்காக, உதவி உள்ளூராட்சி ஆணையர் அலுவலகத்தின் மூலம் 10 பேருக்கு இதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்களே பொதுமக்கள் கருத்துக்களை இதற்காக பெற்றிருக்கிறார்கள்.

அவை இப்போது ஆராயப்பட்டு வருவதாகவும், அது குறித்த அறிக்கை இன்னும் ஒருவார காலத்துக்குள் மாநகர சபைக்கு வழங்கப்படும் என்றும் சசிகரன் தெரிவித்தார்.

இந்தக் கருத்துக்கணிப்பு குறித்து, மக்கள் கணிசமான ஆதரவைத் தந்ததாகவும், அவர்கள் வெகு ஆர்வத்துடன் தமது கருத்துக்களை தெரிவித்ததாகவும் சசிகரன் குறிப்பிட்டார். உண்மையில் மக்களிடம் இருந்து இந்த கருத்துக்கணிப்புக்கு 100 வீத ஆதரவு கிடைத்தது என்றும் அவர் கூறினார்.

இந்தத் திட்டத்துக்கான நிதியுதவியையும் தொழில்நுட்ப உதவியையும் ஆசிய மன்றம் வழங்குகின்றது.

இதேபோல இலங்கையில் ஆசிய மன்றத்தினால் உதவி வழங்கப்படும் பல உள்ளூராட்சி அமைப்புக்களுக்கும் இலத்திரனியல் செயலி மூலமான கருத்தறியும் பணி நடப்பதாகவும் சசிகரன் கூறினார்.

## பருத்தித்துறை நகரபிதா மட்டக்களப்பு மாநகர சபைக்கு விஜயம்



பருத்தித்துறை நகரசபையின் நகரபிதா ஜோசெப் இருதயராஜா தலைமையில், பசுமை காக்கும் அபிவிருத்தி திட்டங்கள் என்ற தெனிப்பொருளில் மேற்கொள்ளபப்பட்ட இந்த விஜயத்தில் பருத்தித்துறை பிரதி நகரபிதா மற்றும் நகரசபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர். மட்டக்களப்பு மாநகர சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற மரநடுகைத் திட்டங்கள் தொடர்பாகவும், பசுமை காக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் அனுபவங்களையும், செயன்முறைகளையும் அறிந்துகொள்ளும் நோக்கில் இவ்விஜயத்தினை அவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

குறித்த விஜயத்தினை மேற்கொண்டிருந்த குழுவினர், மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலிலும், மாநகர சபையினால் மரம் நடுகை தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பாகவும், எதிர்காலத்தில்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

## 4 பேர்ச்சர்ஸ் காணியிலும் கட்டிடம் கட்டலாம்




இதுவரையில், மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் கட்டிடங்கள் அமைப்பதற்கு ஆகக்குறைந்தது 6 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட காணி இருக்க வேண்டும் என்ற ஏற்பாட்டினை திருத்த வேண்டும் எனக் கொண்டுவரப்பட்ட தீர்மானமானது ஏகமனதாக மட்டக்களப்பு மாநகர சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையின் 9 ஆவது அமர்வு மாநகர முதல்வர் தி.சரவணபவன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது “மாநகர எல்லைக்குள் கட்டிடங்கள் அமைப்பதற்கு ஆகக்குறைந்தது 6 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட காணி இருக்க வேண்டும் ஆனால் தற்காலத்தின் சனநெரிசல், பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் பொருளாதார, சமூக நலனைக் கருத்தி;ற்கொண்டு கட்டிடம் கட்டுவதற்காக அனுமதிக்கப்படும், ஆகக்குறைந்த காணி விஸ்தீரனத்தினை 4 பேர்ச்சஸ் ஆக மாற்றியமைக்க வேண்டும்” என்று மாநகர முதல்வாரால் கொண்டுவரப்பட்ட தீர்மானமானது சபையில்

தொடர்ச்சி... (பக்கம் -15 )

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் உபதேசிய ஆளுகை திட்டத்தின் நன்கொடையின் ஊடாக இந்தப் பக்கத்துக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது

# வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

--- பேராசிரியர் சி. மௌனகுரு ---

**மட்டக்களப்பில் வீசிய இரண்டாவது சமய அலை**

2 காலத்திற்குக் காலம் குடியேற்றங்கள் ஏற்பட்ட போது அக்குடிகள் கொணர்ந்த மதமும், வழிபாடுகளும், வழிபாட்டு மொழியும்
(இது இடைக்காலம்)
பூர்வீக காலத்தை அறிய எமக்கு ஆதாரங்கள் குறைவு ஆனால் பூர்வீக காலத்தின் எச்ச சொச்சங்கள் இன்றும் எமது பண்பாட்டு மரபில் விசேடமாகச் சமய வழிபாடுகளில் காணப்படுகின்றன. அந்தக்காலத்தை நாம் சரித்திரத்துக்கு முந்திய காலம் எனலாம். கற்காலம் என மானிடவியலாளர் இதனைக் குறிப்பிடுவர், இதனைப் பெரும் கற்காலப் பண்பாடு எனவும் அழைப்பர். இப்பண்பாடு தென்னிந்தியாவிலும் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்தமைக்கான புதைபொருள் சான்றுகளும் உண்டு, பெரும்பாலும் இது அரசு உருவாக்கம் இல்லாத காலம். இரும்பு பாவனைக்கு வராத காலம்.

இரும்புக்காலம் தோன்றிய பின்னர் இங்கு இன்னொருவித நாகரிகம் உருவாகிறது,அது வெளியிலிருந்து மட்டக்களப்பு வந்த சமூகக் குழுக்களால் உருவாகின்றது. நாகர் ஆட்சி இதில் முக்கியமானது. அண்மைக்காலத்தில் நாகர் ஆட்சி, பண்பாடு சம்பந்தமான நிறையப் புதை பொருட்கள் எமக்குக் கிடைத்துள்ளன. இந்நாகராட்சியும் நாகர் ஆட்சி சார்ந்த பண்பாடும் மட்டக்களப்பின் பல இடங்களில் இருந்தமையும் அண்மைக்காலத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் புதைபொருட்களை ஆதரமாகக் கொண்டு பேராசிரியர் பத்மநாதன் நிறுவியுள்ளார். நாகதம்பிரான் வழிபாடு இக்காலத்திலேயே வந்திருக்க வேண்டும், இது பண்டைய நாக வழிபாடு.

இக்காலத்திற்குப் பின்னரேயே இலங்கையிற் குடியேற்றங்கள், குறிப்பாக இந்தியாவிலிருந்தும் சிறப்பாகத் தென்னிந்தியாவிலுருந்தும் வர ஆரம்பிக்கின்றன, அப்படி பின்னாளில் மட்டக்களப்புக்கு வந்த குழுவினர்கள் தம்மோடு தமது குலத் தெய்வ வழிபாடுகளையும் கொணர்ந்திருக்க வேண்டும்.

கடல்நாச்சியம்மன், காளியம்மன், மாரியம்மன் ,கண்ணகையம்மன், திரௌபதையம்மன், வைரவர், நரசிங்க வைரவர், சிங்கநாத வைரவர், காத்தவராயன், ஹனுமார், நாகதம்பிரான், படபத்திரகாளி, பெரியதம்பிரான், பேய்ச்சியம்மன், போன்ற தெய்வங்கள் அந்நியர் மட்டக்களப்பில் குடியேறியபோது இங்கு கொணரப்பட்ட தெய்வங்களாகும்.

இவற்றுள் கண்ணகியம்மன் தெய்வம் கஜபாகு மன்னனால் இலங்கைக்குக் கொணரப்பட்டு, பின்னர் மட்டக்களப்புக்கு அறிமுகப்படுத்தப்பட்ட தெய்வம் எனுமோர் கருத்தும் உண்டு. இவை தமிழ் நாட்டிலும் கேரளாவிலும் தெலுங்கு நாட்டிலும் தமக்கெனத் தனித்தனி வரலாறுகொண்ட தெய்வங்களாயிருந்தன. அந்த வரலாற்றுக் கதைகளுடனேயே அவை இங்கு வந்தன.

இவை தமக்கென வழிபாட்டு முறைகளையும் துதிப் பாடல்களையும் கொண்டிருந்தன. அவை கிராமங்களில் தெய்வங்களாக வைக்கப்பட்டபோது உள்ளூர்ப் புலவர்கள் அந்தத் தெய்வங்களுக்கான துதிப்பாடல்களைப்பாடிக் கொடுத்தனர், மட்டக்களப்பிலுள்ள இச் இறு தெய்வங்களையும், அவற்றிற்கான பாடல்களையும் சிதம்பரப்பிள்ளை என்பார் பதிப்பித்த மஹாமாரித் தேவி திவ்விய கரணி எனும் நூலில் காணலாம். அதுவோர் மிக முக்கிய நூலாகும்

**வழிபாட்டு முறை**



இவ்வழிபாடுகளைச் செய்தோர் பூசாரிமார் என அழைக்கப் பட்டனர். வழிபாடு செய்ய சில விதிமுறைகள் இருந்தன, இவ்விதி முறைகளைக் கூறும் நூல்கள் பத்தாசிகள் என அழைக்கப்பட்டன, பத்ததிகளின் கிராமிய வடிவம் பத்தாசிகள். காளியம்மன், மாரியம்மன், கண்ணகியம்மன், வைரவர் முதாலாம் தெய்வங்களுக்கு தனித்தனிப் பத்தாசிகள் இருந்தன.

கும்பம் வைத்தல் என்பது இவ்வழிபாட்டின் முக்கிய அம்சமாகும். அட்சரம் கீறி அதன்மேல் கும்பம் வைக்கப்படும், கும்பம் செய்யும் முறை அதனை ஆவாகனம் செய்து பீடத்தில் வைக்கும் முறை என்பனவும் கும்பத்திற்கு முன்னால் மடை வைக்கும் முறை என்பனவும், கோவிற்படி கடக்கும் முறை, பூசை பண்ணும் முறை என்பனவும் ஒரு சட்டதிட்டத்துக்குள் வந்தமையை இப்பத்தாசிகள் காட்டி நிற்கின்றன.

மந்திரம் உரைத்து தெய்வங்களை மனித உடலில் வரப்பண்ணல், வந்த உருவை தோத்திரப் பாடல்கள் பாடி, அம்மனித உடலில் தங்க வைத்தல். அட்சரம் கீறி அதன் மீது மடை வைத்தல் என்பன வழிபாட்டு முறைகளாகும். இவை முந்திய வழிபாட்டு முறைகளிலிருந்து வேறானவை

**தெய்வ உருவங்கள்**

இவ்வழிபாட்டு முறையில் ஆகம விதிகளுக்குட்பட்ட தெய்வங்கள் போல் தெய்வ விக்கிரகங்கள் இருக்கவில்லை,அதற்குப்பதிலாக மூல ஸ்தானத்தில் வைரவராயின் சூலமும் கும்பமும் வைக்கப்பட்டன.

காளி, மாரி என்ற பெண் தெய்வங்களாயின் கும்பம் சூலத்துடன் முகக்களையும் வைக்கப்பட்டது. முகக்களை என்பது செம்புத் தகட்டினால் செய்யப்பட்ட ஓர் பெண் முகமாகும். அம்முகத்தின் கீழ் கம்புகளைக் கீழ் நோக்கி வரிசையாக இறுக்கிக் கட்டி அடுக்கி அதில் சேலைகளை மடித்துச் சாத்தி அப்பெண் முகம் பாவாடை கட்டி இருப்பது போன்ற ஒரு உருத்தோற்றம் உருவாக்கப் பட்டிருக்கும். தோற்றத்தை வேப்பிலையாலும் மலர்களாலும் மேலும் அழகுபடுத்துவர். இது சுவாமிக்கு அடுக்கு சாத்துவது போல இருக்கும், இது கோவில் மூல ஸ்தானத்தில் வைக்கப்பட்டது பூசகரும் ஒருவரானார்.

இயற்கையாக அம்மனை அலங்கரித்தல்

சில பெண்தெய்வ வணக்கக் கோவில்களில் முகக்களையை வைத்து அதற்கு அட்டியலாக வாழைப்பழச் சீப்பும் ஸ்தனங்களாயிரண்டு இளம் தேநீர்க் குரும்பைகளும், கூந்தலாக கமுகம் பூ மடலும், சேலையாக வேப்பிலையும் அணிவர். அவ்வுரு ஒரு பெண்போல காட்சிதரும். ஒருவகையில் இயற்கையைத் தெய்வமாக உருவகித்த பண்டைய தாந்திரீக மத வழிபாடு இது எனலாம். துதிப்பாடல்களும் மந்திரங்களும் தமிழ் மொழியிலேயே இருந்தன. ஒருவகைத் தமிழ் வழிபாடு இது, ஆரிய மதம்போல தெய்வத்திற்கும் மனிதருக்குமிடையே இடைத்தரகராக பிராமணக் குருக்கள் இங்கு இருக்கவில்லை. மனிதர் உடலில் வந்து புகுந்ததாக எண்ணிய தெய்வங்களான காளி, மாரி, வைரவர் போன்ற தெய்வங்களுடன் பூசாரியாரின் உதவியுடன் பக்தர்கள் பேசினர், குறைகளைக் கூறினர். உரிமையுடன் சண்டைகூட இட்டனர். அது ஒரு வித நெருக்கமான வழிபாட்டு முறை.

இக் கோவில்கள் வருடம் தோறும் திறக்கப்பட்டன. ஏழு நாள். அல்லது பத்து நாட்களுக்கு சடங்குகள் நடத்தப்பட்டன, சடங்கின் இறுதிநாள் பலிகொடுத்தலாக அல்லது தீப்பாய்தலாக அல்லது கடலாடுதலாக அல்லது பள்ளயம் கொடுத்தலாக (பெரும் சோறு) பெரும்காட்சிப்பண்பு கொண்ட அனைவரையும் இணைக்கும் ஒரு பெருவிழாவாக அமையும். தேர் திருவிழாக்கள் இல்லை அவை பின்னால் வந்தவை. இங்கு பறையும் உடுக்கும் பிரதான வாத்தியமாகும். மந்திரங்கள் உடுக்கொலியுடன் சொல்லப்பட்டு, தெய்வங்கள் தெய்வக்காரருக்கு உருவேற்றப்படும், குறிப்பிட்ட தெய்வம் அத்தெய்வக்காரரில்



வந்த பின் பறையுடன் ஆட்டம் தொடரும். இத்தெய்வக்காரர் கைகளில்




சிலம்பணிந்திருப்பர். உடுக்கொலி, பறை ஒலி சிலம்பொலி கலந்து பார்ப்போரின் நாடி நரம்பெல்லாம் முறுக்கேற்றி ஒருவித பரவச நிலையை ஏற்படுத்தும். ஆடலும் பாடலுமாக அவ்வழிபாட்டு முறை அமையும்.

இவ்வணக்க முறைகளும் அவை சம்பந்தமான பத்தாசிகளும், வழிபாட்டு முறைகளான கும்பங்கள், ஆடல்கள், மந்திரங்கள், துதிப்பாடல்கள் என்பனவும் இங்கு ஏற்கனவே இருந்த புராதன வழிபாட்டு முறைகளைப்பாதித்தன. வந்த குடிகள் தொழிநுட்பத்திலும் பொருளாதாரத்திலும் வளர்ச்சியடைந்த சமூகங்கள் ஆனமையினால் இங்கு வாழ்ந்த பூர்வீக குடிகள் வந்தவற்றைத் தம்முடன் இணைத்தனர். ஒரு வித பண்டைய கலாசார மேல் ஆதிக்கம் இதுவெனலாம்.

செழுமையுடன் இருந்த வழிபாட்டு முறைகளுடன் இன்னொரு செழுமையான வழிபாட்டு முறைகள் இணைகையில் இருந்ததும் வந்ததும் கலந்து இன்னொன்றை ஏற்படுத்தும். இதனைச் சிந்தீஸிஸிஸ் என்பர்...இதுவே அன்று நடந்தேறியது. இரண்டும் இணைந்தன, புராதன தெய்வங்கள் சிலவற்றை வந்த தெய்வங்கள் இணைத்துக்கொண்டன, வழிபாட்டு முறைகளிலும் இது நடந்தேறியது. புராதன பெண் தெய்வங்கள் காளி அம்மனின் அல்லது மாரி அம்மனின் பரிகலத் தெய்வங்களாக (உப தெய்வங்களாகக்) கருதப்பட்டன,, மாறா வதனமார் போன்ற புராதன ஆண் தெய்வங்கள் வைரவரோடு தொடர்புபடுத்தப்பாட்டு அவரின் பரிகல தெய்வங்களாயின.

தொடர்ச்சி... (பக்கம் -15 )

# மட்டக்களப்புப் பிரதேசப் பாரம்பரிய கல்வி வளர்ச்சி - சில அவதானங்கள் 3



*முன்னதாக கடந்த பகுதியில் குறிப்பிட்ட வழிமுறைகளுள் கூத்துக்கலை முதன்மையிடம் பெற்றுள்ளது. கூத்து கலையூடாக இதிகாச, புராண, இலக்கிய, வரலாற்று அறிவு கிடைத்துள்ளது, இவ்விதத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்திலே ஆடப்பட்டு வந்துள்ள கூத்துக்களின் உள்ளடக்கத்தினை கவனிப்பது அவசியமானது.*

வாளவீமன் நாடகம் அல்ல நாடகம் பாரதம் இந்திர குமாரன் நாடகம் முதலியன

இராம நாடகம் இராவணேசன் நாடகம் இராமாயணம் குசலவன் நாடகம் முதலியன

தஞ்சன் போர் பாகவத புராணம் சத்திய பாமா முதலியன

வள்ளியம்மன் நாடகம் கந்த புராணம் மார்க்கண்டன் நாடகம் முதலியன

சிறுத் தொண்டன் நாடகம் பெரியபுராணம் கண்டியரசன் நாடகம் வரலாற்றுக்கதைகள்

பூதத்தம்பி நாடகம் முதலியன

இவ்விதத்தில் கூத்துக்கலை போன்று வாய்மொழி பாடல்களும் கவனத்துக்குரியதாயுள்ளன. வாய்மொழி பாடல்களுள் ஊஞ்சல் பாடல்கள் குறிப்பிடத்தக்கவை - இத்தகைய ஊஞ்சல் பாடல்கள் இதிகாசம் சார்ந்தனவாகவும் (வள்ளி திருமணம்) வரலாறு சார்ந்தனவாகவும் (கட்டபொம்மன், கண்டியரசன், பண்டார வன்னியன் ஒல்லாந்தர் படையெடுப்பு, வெள்ளைக்காரன் சண்டை) இருந்துள்ளன. இவ்வூஞ்சல் பாடல்கள் பெண்களாலும் பாடப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தில் ஆய்வாளரொருவரின் பின்வரும் கூற்றினை கவனிப்போம்:

**பேராசிரியர் செ. யோகராசா**

"ஈழத்தை ஆண்ட கண்டியரசன் சரித்திரத்தை நான் ஏழாம் வயதில் ஊஞ்சல் பாட்டைக் கேட்டே அறிந்து கொண்டேன். அது போலவே புராணக் கதைகள் வரலாற்று சம்பவங்கள், ஊஞ்சல் பாட்டுக்கள் மூலம் போதிக்கப்படுகின்றன." ஊஞ்சல் பாடல்கள் போன்று அம்மானைப் பாடல்களும் சிறப்பிடம் பெற்றுள்ளன. அம்மானைப் பாடல் வடிவங்களை பயன்படுத்தி இயற்றப்பட்டுள்ள இலக்கியங்கள் வீடுகளிலும் (பாரத அம்மானை, இராமர் அம்மானை) மரணச் சடங்குகளிலும் (வைகுந்த அம்மானை) பாடப்பட்டு வந்துள்ளமை மட்டக்களப்புப் பிரதேச நீண்ட கால பாரம்பரியமாகும். எடுத்து காட்டாக பாரத அம்மானையின் காலம் கி.பி. 16ம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகிறது. முஸ்லிம் மக்கள் மத்தியிலே பாடப்பட்டு வந்துள்ள இசுவா அம்மானையின் காலம் 18ம் நூற்றாண்டாகும். தவிர வாய்மொழிப் பாடல்கள் வரிசையில் அடங்கும் தாலாட்டு பாடல்கள், வழி நடைச் சிந்துகள், விளையாட்டுப் பாடல்கள் முதலியவற்றின் முக்கியத்துவமும் மேற்குறித்த விதத்தில் குறைத்து மதிப்பிடக் கூடியனவல்ல.

ஊரிலே நிகழும் முக்கிய சம்பவங்கள் (புயல், வெள்ளப் பெருக்கு) புதுமைகள் (இங்கினியாகல நீர்த் தேக்கம்) முதலியனவற்றை அவ்வப்போது பாடல்களாக இயற்றி, ஊர் மக்கள் மத்தியிலும், பொது இடங்களிலும் கோயில்களிலும் பாடி வந்துள்ள வாய் மொழிப் புலவர்களின் பாரம்பரியமும் மட்டக்களப்பு பிரதேசத்திலே நீண்ட காலமாக நிலவி வந்துள்ளமை வற்புறுத்தப்பட வேண்டியதே. இத்தகைய புலவர்கள் இயற்றிய பாடல்களுள் பழைய ஏட்டுப் பிரதிகளிலும் நூல்களிலும் உள்ள வரலாற்றை அம்மானையிலே பாடிப் பாமர மக்களும் அறியச் செய்யும் நோக்குடன் கன்னன்குடா சிதம்பரபிள்ளைப் புலவர் பாடிய மட்டக்களப்பு வரலாற்று அம்மானை நுணுகிக் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

குறிப்பாக பொதுமக்களை மனங்கொண்டு, அவர்கள் முன்னிலையில் பாடப்படும் நோக்குடன் அவர்களைக் கவரும் விதத்திலும் நூல்களை இயற்றும் வழக்கமும் மட்டக்களப்பு பிதேசத்திலே இருந்து வந்துள்ளமை மனங்கொள்ளத்தக்கது. ஆரம்பத்திலே குறிப்பிட்டுள்ள எண்ணெய்ச் சிந்து, சிறுவர்கள் மத்தியிலே நல்லொழுக்கம் தாய்பாசம், கல்வியின் சிறப்பு என்பவற்றை இளம் பருவத்திலேயே ஏற்படுத்தும் நோக்குடன் இயற்றப்பட்டமை விதந்துரைக்கற்தக்கது.

இறுதியாக கூத்துக் கலையின் முக்கியத்துவம் பற்றி இன்னொரு விடயமும் இவ் இடத்தில் வற்புறுத்த வேண்டியுள்ளது. அதாவது, ஊர் மக்கள் மத்தியிலே சமூக ஒருமைப்பாடு, கூட்டுப் பொறுப்பு, திட்டமிட்டுச் செயற்படுமாற்றல் முதலியன உருவாவதற்கும் கூத்து பெருந்துணை புரிந்து வந்துள்ளதென்பதே அதுவாகும்.

சுருங்கக் கூறின், மட்டக்களப்பு பிரதேசத்தில் நிலவி வந்த செவியேறல் கல்வி முறையின் முக்கியத்துவம் ஏனைய பிரதேசங்களை விட அதிகமானது என்பதில் தவறில்லை

# மாணவர்க்காக தன்னை ஈர்ந்த நேசராணி ஆசிரியை



கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் ஓய்வுநிலை சிரேஸ்ட இரசாயனவியல் ஆசிரியை செல்வி தங்கராஜா நேசராணி அவர்களின் நல்லடக்கம் கடந்த செவ்வாய்க்கிழமை காரைதீவு இந்து மயானத்தில் நடைபெறவுள்ளது.

மாணவர்களாலும் ஏனையோராலும் உள்ளன்புடன் நேசிக்கப்பட்டுவந்த செல்வி த.நேசராணி ஆசிரியை ஞாயிறு(18) அதிகாலை இயற்கையெய்திய செய்தி அவர் கற்பித்த கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரிக்கு மாத்திரமல்ல அவர் பிறந்த காரைதீவுக்கு மாத்திரமல்ல இந்நாள் கல்விச்சமூகத்திற்கு பாரிய இழப்பாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.
இவர், காரைதீவில் முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளார் பிறந்த வீட்டிற்கு முன்னாள் இருந்த வீட்டில் பிறந்த தங்கராஜா நேசம்மா தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வியாவார். இவர் நேசராசா, நேசரஞ்சினி, நேசராமன், நேசராதா, நேசராகவன் எனும் சகோதர சகோதரிகளுடன் வாழ்ந்துவந்தார். சிறுவயதிலேயே உடல் நிலை சீரில்லாதபோதும் இவர், கல்வியில் மிகவும் ஆர்வமாக இருந்துவந்தார். அவர் கிழக்கு பல்கலைக்கழகத்தில் தனது விஞ்ஞானமாணிப்பட்டத்தைப் பூர்த்தி செய்து இறுதிவரை கல்முனை கார்மேல் பாத்திமாக்கல்லூரியில் கற்பித்துவந்தார்.

**வேத சகா**

ஆசிய சேவையை இணைந்த ஆசிரியை நேசராணியினால் அச்சேவை மகத்துவம் பெற்றது என்று சொன்னால் மிகையில்லை. இரசாயனவியல் என்றால் நேசராணி : நேசராணி என்றால் இரசாயனவியல் என்று கூறுமளவிற்கு புகழ்விளங்கிய ஆசிரியை அவர்.

கல்முனை பாத்திமாக்கல்லூரி அதிபர் வண. சகோ. எஸ்.எ.ஐ.மத்தியு அடிகளார் இந்த ஆசிரியையின் சேவையைப்பாராட்டி பாராட்டு மலரொன்றை அச்சுவாகனமேற்றினார்.

# சமாதான நீதவான்



துறைநீலாவணையை பிறப்பிடமாகவும் தற்போது மட்டக்களப்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மதியழகன் அகில இலங்கை சமாதான நீதவானாக மட்டக்களப்பு மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.எம். றிஸ்வி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். ஆறுமுகம் பகவதி ஆகியோரின் மகனும் பேராதனைப்பல்கலைக்கழகத்தின் பட்டதாரியுமானஇ இவர் மட் துறைநீலாவனை மகாவித்தியாலயம் மட்ஃசிவானந்தா மகாவித்தியாலயம் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லுரி கல்முனைஃவெஸ்லி உயர்தரப்பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவருமாவார். தனது ஆசிரியர் தொழிலை கல்முனை வெஸ்லி உயர்தரப்பாடசாலையில் ஆரம்பித்த இவர் தற்போது மட்.வின்சன்ட் மகளிர் உயர்தரபாடசாலையில் அரசறிவியல் ஆசிரியராக கடமையாற்றுவதோடு பாடசாலை அபிவிருத்திச்சங்கம் முகாமைத்துவ குழு மற்றும் பாடசாலை ஒழுக்கக் கட்டுப்பாட்டு குழ உறுப்பினராகவுமஇ; சமூக அபிவிருத்தி அமைப்பின் செயலாளராகவும் சமுக சேவையில் ஈடுபாடுகொண்டவராவார்.

தொடர்ச்சி...

# மூதாதையரின் காலடிகள் கயல் கொடி மலை

தொடர்பு படுத்துகிறார்.
இந்தக் கல்வெட்டு பற்றி மூன்று விதமான வாசிப்புகள் இருந்தாலும் அவை தமிழோடும் தமிழர் பண்பாட்டோடு நெருங்கிய தொடர்புள்ளதாய் உள்ளது என்பது நிருபணமாகிறது.

கயல்கொடி மலையில் புராதன மனிதர்கள் வாழ்ந்தற்கான வாழ்வியல் தடங்கள் நிறையவே காணப்படுகின்றன.

(இன்று இந்த வரலாற்றியல் மலையை இடித்து கல்லுடைக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன)

# விளையாட்டு

## கால்பந்தாட்டத்தில் முத்திரை பதித்த அமரர் ரவீஸ் அவுட்ஸ்கோன்



மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் 1980 களில் ஜொலித்த இளம் வீரர்களுள் ஒருவராக ரவீஸ் என அழைக்கப்பட்ட ரவீஸ் அவுட்ஸ்கோன் அவர்கள் விளங்கினார். இவர் ஆரம்பத்தில் பாடுமீன் பொழுது போக்குக் கழகத்தில் விளையாடியதுடன், 1990 களின் பின்னர் கூளாவடி டிஸ்கோ கழகத்தின் நிகரில்லா வீரனாகக் களமாடி மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் டிஸ்கோ கழகம் முன்னிலைக்கு வரக் காரணமான வீரர்களுள் முதன்மையானவராக விளங்கினார்.

மட்டுநகரின் கால்பந்தாட்ட வரலாற்றில் 1990 கள் வரை மாவட்ட மட்டத்தில் உள்ள வீரர்களைக் கொண்ட பாடுமீன் கழகம், மைக்கல்மென் கழகம், அன்ரனீஸ் கழகம், பி.ஆர்.சி கழகம் முதலிய சில கழகங்களின் ஆதிக்கமே நிலவி வந்தது. இந்த ஆதிக்கத்திற்குச் சவால் விடும் கழகமாக 1990 களின் ஆரம்பத்தில் டிஸ்கோ கழகம் தன்னை வெளிப்படுத்தியிருந்தது.

இவ்வாறு மட்டுநகரின் கால்பந்தாட்டத்தின் வரலாற்றில் புதியதொரு பாதைக்கு வித்திட்ட வீரர்களுள் ஒருவராக ரவீஸ் விளங்கினார். பாடுமீன் கழகத்தில் முன்னணி வீரர்களாக களமாடிய ரவீஸ் மற்றும் அவருடைய நண்பர்கள் சிலர் 1990 களின் ஆரம்பத்தில் தாம் வாழ்ந்த பிரதேசத்தை மையப்படுத்திய டிஸ்கோ கழகத்திற்காக கால்பந்தாட்டம் ஆடுவதற்காக புறப்பட்ட போது மட்டுநகரின் கால்பந்தாட்ட வரலாற்றில் புதிய கவனிக்கத்தக்க அணியாக டிஸ்கோ கழகம் மேற்கிளம்பியது.

1990 காலப்பகுதியில் பாடுமீன் கழகத்திற்குச் சவால் விடும் கழகமாக டிஸ்கோ களமாடியது. பல விறுவிறுப்பான இறுதிப் போட்டிகளில் பாடுமீன் கழகத்தை வெற்றி கொண்டு மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் டிஸ்கோ தன்னை அந்நாட்களில் வெளிக்காட்டியிருந்தது. மட்டுநகரின் கால்பந்தாட்ட வரலாற்றில் 1990களில் பேசப்பட்ட ஜெரோஜினி ஞாபகார்த்த சவால் கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டியில் பாடுமீன் கழகத்துடன் மோதி 4:2 எனும் பேறுகளால் பெரு வெற்றி பெற்ற டிஸ்கோ கழகத்தின் சாதனையில் ரவீஸ் அவர்களின் ஆற்றுகை சிறப்பாக அமைந்திருந்தது. இன்று வரை டிஸ்கோ கழகத்தின் ஆதிக்கம் மட்டுநகரின் கால்பந்தாட்டத்தில் நிலவி வருவதனைக் காண்கின்றோம்.

1990 களில் டிஸ்கோ கழகம் தன்னை கால்பந்தாட்டத்தில் முன்னிலைப்படுத்த மிகவும் பங்களித்த முன்னணி வீரராக ரவீஸ் அவர்கள் விளங்கினார். பந்தைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்து மிக வேகமாகவும் எதிர்ப்படும் வீரர்களை ஏமாற்றியும் முன்னகர்த்தும் சாதுரியமான வீரராக இவர் களங்களில் ஆடுவார். ரவீஸ் அவர்களின் கால்பந்தாட்ட ஆற்றுகை மிகவும் ரசிக்கத்தக்கதாக இருக்கும்.

**து.கௌரீஸ்வரன்**

இவரின் அலாதியான ஆட்டத்தைக் காண்பதற்கென்றே ரசிகர்கள் கூடுவார்கள்.

இந்த ரவீஸ் அவுட்ஸ்கோனின் குடும்பத்தினரும் உறவினர்களும் கால்பந்தாட்டத்தில் காதல் கொண்டவர்கள். இவருடைய சகோதரர்கள் அனைவரும் சிறந்த கால்பந்து வீரர்கள், இவருடைய சிறிய தந்தையாரே மறைந்த எட்வேட் அவுட்ஸ்கோன் அவர்களாவார். இவ்வாறு தனது குடும்பத்துடனும் சுற்றத்தாருடனும் கால்பந்தாட்டம் ஆடி மட்டுநகருக்கு பெருமை சேர்த்த மறைந்த அந்த மகத்தான ரவீஸ் எனும் வீரனை அரங்கத்தில் பதிவாக்கி ஞாபகப்படுத்துவோம்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்
Koddamunai Sports Club
Batticaloa

## மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தால் நடத்தப்படும் திணைக்களங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி 2018



கிறிக்கட்டில் பிராந்திய சுகாதாரத் திணைக்களம் சம்பியன், இரண்டாமிடம் - நில அளவைத் திணைக்களம்.

வலைப்பந்தில் கல்வித் திணைக்களம் சம்பியன், இரண்டாமிடம் - மாவட்டச் செயலகம்.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் விளையாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட அரச திணைக்களங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி கடந்த வாரத்திலிருந்து மட்டு வெபர் மைதானத்தில் மாவட்ட அரச அதிபர் திரு மா.உதயகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டிகளை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு.வே.ஈஸ்பரன் அவர்களும் விளையாட்டு உத்தியோகத்தர்களும் ஒழுங்கமைத்து சிறப்பாக நடத்தி வருகின்றார்கள். இதுவரை நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் மட்டக்களப்பு பொலிஸ் திணைக்கள அணியும், மாவட்டச் செயலக அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன. இதே நேரம் கிறிக்கட் சுற்றில் பிராந்திய சுகாதாரத் திணைக்கள அணி மாவட்ட நில அளவைத் திணைக்கள அணியை வெற்றி கொண்டு முதலிடத்தைப் பெற்றுள்ளது. வலைப்பந்தாட்டத்தில்



கல்வித்திணைக்கள அணி மாவட்டச் செயலக அணியை வெற்றி கொண்டு முதலிடத்தைப் பெற்றுள்ளது.

தடகளப் போட்டிகள் டிசம்பர் மாதத்தில் நடைபெறும் என மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வைரவிழாவையொட்டிய விளையாட்டுபோட்டிகள்



(காரைதீவு சகா)

மட்டக்களப்பு கல்லடி சிவாநந்தா தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் வைரவிழாவையொட்டிய சிநேகபூர்வ விளையாட்டுப் போட்டிகள் நாளை (24) சனிக்கிழமை கல்லடி சிவானந்தா மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

பொதுக் கூட்டத்தை சிறப்பிக்கும் வகையில் அமைந்த பாடசாலை மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்குமான சினேகபூர்வ முன்னோடி விளையாட்டுப் போட்டி நிகழ்வு நாளை சனிக்கிழமை நடைபெறுகிறது.

காலை மு.ப 08.30 மணியளவில் கிரிக்கட் போட்டியும் பி.ப 04.30 மணியளவில் உதைபந்தாட்டப் போட்டியும் நடைபெறவிருக்கிறது.

மறுநாள் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் முருகேசு முருகவேல் தலைமையில் நடைபெறவிருக்கும் 60 வது வருடாந்த பொதுக்கூட்டம் மற்றும் வைரவிழா நிகழ்வுகள் நடைபெறவிருக்கின்றன.

இராமகிருஸ்ணமிஷன் மட்டு. மாநில முதல்வர் ஸ்ரீமத் சுவாமி தக்ஸயானந்தா ஜீயின் ஆசியுடன் அன்றைய நிகழ்வுகள் யாவும் நடைபெறவுள்ளன.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 12

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

### எழுத்து

• பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவுசெய்க.

1. பின்வருவனவற்றுள் அகச்சுட்டு
   (1) இது (2) எது (3) அன்பு (4) அக்காலம்

2. பின்வருவனவற்றுள் அகவினா
   (1) வருவீரா (2) போவீரோ (3) ஏன் (4) செய்வானே

3. பின்வருவனவற்றுள் ககரம் வேறுபட்டு ஒலிப்பது
   (1) கம்பு (2) பக்கம் (3) கோலம் (4) முகம்

4. பின்வருவனவற்றுள் உயிரளபெடை
   (1) ஒரீஇ (2) அம்ம்மா (3) தடவி (4) அலைஐ

5. பின்வருவனவற்றுள் ஒற்றளபெடை **அல்லாதது**
   (1) அ∴∴கு (2) பொய்ய்கள் (3) ஒற்ற்று (4) இலங்ங்கு

6. ஐகாரக் குறுக்கத்தின் மாத்திரை
   (1) இரண்டு மாத்திரை (2) ஒரு மாத்திரை (3) அரை மாத்திரை
   (4) கால் மாத்திரை

7. பின்வருவனவற்றுள் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள்
   (1) மிளகு, வரவு (2) ஆறு, தெரிவு (3) அன்பு, அலுப்பு
   (4) கயிறு, கடுகு

8. வன்றொடர்க் குற்றியலுகரம்
   (1) பற்று (2) பண்பு (3) பயறு (4) பந்து

9. **பொருத்தமற்ற** சொற்றொகுதி இடம்பெற்றிருப்பது
   (1) இடைத்தொடர்க் குற்றியலுகரம் : மார்பு, சால்பு, செய்து.
   (2) புறச்சுட்டு : அவ்விடம், இம்மரம், இவ்வீதி
   (3) ஐகாரக் குறுக்கம் : கலைஞர், மழை, வளையம்.
   (4) உடனிலை மெய்ம்மயக்கம் : பருப்பு, உணர்வு, விளைச்சல்

10. பொருத்தமான சொற்றொகுதி இடம்பெற்றிருப்பது
    (1) சார்பெழுத்து : குற்றியலிகரம், ஆய்தம், ஆய்தக் குறுக்கம்
    (2) வேற்றுநிலை மெய்ம்மயக்கம் : கன்று, பண்பு, கலக்கு
    (3) எழுத்துப் பிழை கொண்டது : ஈர்க்கு, சவர்க்காரம், முயற்ச்சி
    (4) மொழிக்கு முதலில் வரும் எழுத்து : மா, லா, வா

11. பின்வருவனவற்றுள் முற்றியலுகரம்
    (1) கறங்கு (2) கரவு (3) களிறு (4) தடிப்பு

12. களிறு என்பது
    (1) முற்றியலுகரம் (2) இடைத்தொடர்க் குற்றியலுகரம்
    (3) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் (4) வன்றொடர்க் குற்றியலுகரம்

13. "தெய்வம் தொழாஅள் என்பதில் வந்துள்ள உயிரளபெடையில் அளபெடுத்த எழுத்து
    (1) ழா (2) அ (3) தொ (4) ஆ

14. கூட்டுயிர்கள்
    (1) அ, இ (2) அ, ஔ (3) ஐ, ஔ (4) ஐ, ஆ

15. முதலெழுத்துக்களின் எண்ணிக்கை
    (1) 30 (2) 18 (3) 12 (4) 5

ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். முடிவுத் திகதி : 29.11.2018.

அனுப்பவேண்டிய முகவரி : ஆசிரியர், அரங்கம், 227, பார் வீதி, மட்டக்களப்பு

# கற்போம்

## வேற்றுமை -விடை

**"வேற்றுமை"** என்னும் தலைப்பில் சென்ற வார அரங்கத்தில் கேட்கப்பட்ட பதினைந்து வினாக்களுக்கும் எவரும் முழுமையாகச் சரியான விடையளிக்கவில்லை. சரியான விடை இதோ :

| | | |
|---|---|---|
| 1. (2) | 6. (4) | 11. (2) |
| 2. (1) | 7. (4) | 12. (4) |
| 3. (4) | 8. (1) | 13. (3) |
| 4. (1) | 9. (2) | 14. (4) |
| 5. (3) | 10. (4) | 15. (2) |

## பொது அறிவு (இலங்கை)

என்.தனஞ்சேயன்

**இலங்கையின் ஜனாதிபதிகள்**

பெயர் பதவிக்காலம்
1. வில்லியம் கோபல்லாவ 1972 – 1978
2. ஜே.ஆர்.ஜயவர்த்தன 1978 – 1989
3. ரணசிங்க பிரேமதாஸ 1989 – 1993
4. டீ.பி.விஜேதுங்க 1993 – 1994
5. சந்திரிக்கா பண்டாரநாயக்ககுமாரதுங்க 1994 – 2005
6. மகிந்த ராஜபக்ச 2005 –2015
6. மைத்திரிபால ஶ்ரீசேன 2015–

**இலங்கையின் பிரதமர்கள்**

| பெயர் | | பதவிக்காலம் |
|---|---|---|
| 1. | டி.எஸ்.சேனாநாயக்க | 1948 – 1952 |
| 2. | டட்லி சேனாநாயக்க | 1952 – 1953, 1960, 1965 – 1970 |
| 3. | ஜோன் கொத்தலாவல | 1953 – 1956 |
| 4. | ளு.று.சு.னு.பண்டாரநாயக்கா | 1956 – 1959 |
| 5. | று.தகநாயக்க | 1959 – 1960 |
| 6. | ஶ்ரீமாவோ பண்டாரநாயக்க | 1960 – 1965,1970-1977,1994-2000 |
| 7. | து.சு.ஜெயவர்த்தனா | 1977 – 1978 |
| 8. | ரணசிங்க பிரேமதாசா | 1978 – 1989 |
| 9. | னுீ.விஜயதுங்க | 1989 – 1993 |
| 10. | ரணில் விக்கிரமசிங்க | 1993 – 1994, 2000 – 2004 |
| 11. | சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க | 1994 – 2000 |
| 12. | மகிந்த ராஜபக்' | 2004 – 2005 |
| 13. | இரத்னசிறி விக்கிரமநாயக்கா | 2005 – 2010 |
| 14. | னு.ஆஜெயரத்தன | 2010 –2015 |
| 14. | ரணில் விக்ரமசிங்க | 2015– |

**இலங்கையில் வழங்கப்படும் விருதுகள்**

• விஸ்வ கீர்த்தி ஶ்ரீ திரிசிங்ககளாதீ'வர
• விஸ்வ கீர்த்தி மதய சூரி ஜன பிரசாத
• ஶ்ரீ ரோகண ஜனரஞ்சன (மல்வத்து பீடம் வழங்குவது)
• ஹரித்த சம்மான - சூழலை பாதுகாப்பவருக்கு வழங்கப்படுகிறது.
• சரசவிய – சினிமா துறையினருக்கு வழங்கப்படுகிறது.

பக்க அனுசரணை

NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# மதுபாவனையில் உளநலம்

## மதுபாவனை கட்டுப்பாடு தொடர்பான இலங்கையின் தேசியக் கொள்கை -4

தகவல் சேகரித்தல், கண்காணிததல், மதிப்பீடு, ஆராச்சி

மதுபாவனையற்ற சமூகத்தை உருவாக்கும் நோக்குடன் மதுபாவனை குறித்த தகவல் சேகரித்தல், கண்காணித்தல், மதிப்பீடு, ஆராச்சி என்பவற்றை நடைமுறைப்படுத்துதல்.

மதுபானங்களின் விற்பனையில் உள்ள எல்லா வகைகள், அவற்றின் விலைகள் என்பவற்றை கிரமமாக பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். மதுபானவகைகளின் கொள்ளவு, இறக்குமதி, ஏற்றுமதி, வருமானம் என்பன குறித்த தகவல்களை அரச அமைப்புகள் மூலமாக பெற்றுக்கொள்வதுடன் அவற்றை கண்காணிப்பதற்கான நடவடிக்ககைகளை மேற்கொள்ளல். மதுபாவனையால் ஏற்படுகின்ற விபத்துக்கள், வன்முறைகள், ஈரல்கருகல் நோய், தற்கொலை மரணங்கள்,



தற்கொலை முயற்சிகள் என்பன குறித்த தகவல்களை உரிய நேரத்தில் கண்காணித்து சேகரித்துக் கொள்ளுதல். நாட்டின் பொருளாதாரத்திற்கு மதுபாவனையில் கிடைக்கின்ற இலாபம் அத்துடன் அதன் தீவினைகளால் ஏற்படுகின்ற செலவு அடங்கலாக நிகர பொருளாதார நன்மைகள் என்னவென்பதை கண்டறிதல். ஆய்வு அமைப்புகள், அரச ஆய்வு முறைகள், பல்கலைக்கழகங்கள் மூலமாக மதுபாவனை குறித்த ஆராச்சிகளிற்கான படிமுறைகளை ஏற்படுத்துதல். இலங்கைக்கான மதுபாவனை கட்டுப்பாடு கொள்கை அமுலாக்கத்தின் போது உலக வர்த்தகம், ஏனைய உடன்படிக்ககைகள் என்பவற்ற நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகளை கண்டறிதல்.

**புனர்வாழ்வு அளித்து, ஆதரவளிக்கும் பொறி முறைகளை வலுப்படுத்தல்.**

மதுபாவனையில் ஏற்படுகின்ற தீவினைகள் குறித்து தனிநபர், குடும்பம். சமூகம் தேசிய அளவில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் சுகாதாரத் துறை அதன் கீழ் உள்ள வெவ்வேறு பிரிவுகளை பயனுடைய முறையில் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். மதுபாவனையால் பாதிக்கப்பட்டு பல்வேறு உடல், உள பிரச்சினைகளுடன் இருக்கின்ற நபர்களை இனம் காணுதல், அவர்களை உரிய சிகிச்சைக்கு அனுப்புதல் என்பவற்றிற்கு சுகாதார உத்தியோகஸ்தர்கள் முன்னுரிமை கொடுத்து செயற்படுவதோடு, மதுபாவனையை ஆரம்பிக்க முயல்போரையும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். அரச,அரசசார்பற்ற, தனியார் நிறுவனங்களில் மது பாவிக்கும் நபர்களிற்கான உதவிகள் கிடைக்கும் வழிமுறைகளை மீளப் பரிசீலனை செய்து அதன் தரமான சேவைகள், கிடைக்கும் வழிமுறைகள், பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள் குறித்த தகவல்களுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல். மதுபாவிப்பவர்களிற்கான உடனடி இடையீடுகளை மேற்கொள்ளுவதற்கு ஆரம்ப பராமரிப்பு நிலையங்கள். சமூக வலையமைப்பு ஊடாக நிகழ்ச்சி திட்டங்களை மேற்கொள்ளுதல். மதுபாவனையில் ஏற்படுகின்ற உளநோய்கள், பாலியல் நோய்கள், காச நோய் என்பவற்றை கண்டறிவதற்கான பொறிமுறைகளை ஏற்படுத்தி அவற்றை நல்லமுறையில் அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துதல். மாவட்டங்கள் தோறும் புனர்வாழ்வு நிலையங்களை நிறுவுதல்.

**மது உற்பத்தி நிறுவனங்களின் தலையீடுகளை கட்டுப்படுத்தல்**

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் மதுபாவனை தொடர்பான கொள்கை அமுலாக்கத்திலும் நடைமுறைப்படுத்துவதிலும் மது உற்பத்தி நிறுவனங்களின் தலையீடுகளை கட்டுப்படுத்தல். மதுபான உற்பத்தி நிறுவனங்களுடன் அரச அதிகாரிகள் அநாவசியமாக சேர்ந்து இயங்குவதை கட்டுப்படுத்தவதுடன் அதிகாரிகள் அரசாங்கத்தின் மதுபான உற்பத்திகள் தொடர்பான தகவல்களை மட்டும் ஒழுங்கமைக்கப்பட்ட முகாமைத்துவ கட்டமைப்புகளுடன் வழங்குபவர்களாக செயற்படுவதை உறுதிப்படுத்தல். மேற்குறிப்பிட்டுள்ள விடயத்தின் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தல். மதுபாவனை தொடர்பாக வேலைசெய்கின்ற எல்லா அமைப்புகளையும். ஒரு குடையின் கீழ் சுகாதார அமைச்சு ஒழுங்கிணைத்து அதனூடாக விதிமுறைகளை, நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியமான பயனுடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபை, மதுபான கட்டுப்பாடு தொடர்பான கொள்கையை அமுல்படுத்துவதற்கு ஏதுவாக அந்நிறுவனத்தை நல்லமுறையில் பலப்படுத்தல். இலங்கையின் சுகாதார அமைச்சரின் நேரடி கண்காணிப்பின் கீழ் எல்லா துறைசார்ந்த அமைப்புகளையும் ஒருங்கிணைத்து ஆலோசனைச் சபை ஒன்றை ஆரம்பிப்பதுடன், ஒழுங்கான அவற்றின் பணிகளுக்கான ஆய்வறிக்கைகளை பரிசீலனை செய்தல். மதுபாவனை கட்டுப்பாடு தொடர்பான இக்கொள்கையில் அடக்கப்பட்டுள்ள சரத்துகளை நடைமுறைப்படுவத்துவதற்கு தேவையான, நீடித்து நிலைக்ககூடிய நிதி வளங்களை பெற்றுக்கொள்ளல்.



**ஒருகிணைப்பு பொறிமுறை:**

சுகாதார அமைச்சில் உள்ள உளநல பணிப்பாளரின் நேரடி கண்காணிப்பின் கீழ், பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைவாக இக்கொள்கை திட்டம் அமுல் படுத்தும் போது அவற்றை மாகாண, மாவட்ட மட்டங்களில் நிறைவேற்றுவதற்கான செயன் முறையை மாகாண சுகாதார தேவைகள் பணிப்பாளர், மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனை, உளநல வைத்தியர் / மாவட்ட உளநல ஒருங்கிணைப்பாளர் ஊடாக செயற்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு குழுக்களை நிறுவுதல்.

மதுபாவனை பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுகின்ற நிறுவனங்கள், ஆய்வாளர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ மது உற்பத்தி நிறுவனங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதை தடுப்பதற்கான சாத்தியமான செயற்பாடுகளை இக்கொள்கை திட்டதிற்கு முரணாகாமல் நடைபெறுவதை உறுதிப்படுத்துதல். மது உற்பத்தி நிறுவனங்களால் செயற்படுத்தப்படுகின்ற எல்லாவிதமான சமூக செயற்பாடுகளையும் உடன் அமுலுக்கு வரும் வகையில்

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமார்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை

தவிர்ப்பதோடு, அவ்வாறான வேலைத்திட்டங்களை அரச, அரசுசாரா, தனியார் அமைப்புகள் மூலம் முன்னெடுத்தல். மது உற்பத்தி நிறுவனங்களால் அனுசரணை செய்யப்பட்டு நடைபெறுகின்ற பொதுச் சுகாதார, கல்வி, வர்த்தகம், இளைஞர் விளையாட்டு துறைகளிற்கான கொடுப்பனவுகளை,முன்னேற்பாட்டு செயற்பாடுகளின் தவிர்த்துக்கொள்ளுதல் அல்லது தடுத்தல்.

**துறைகள் ஒழுங்கமைப்பும் நிதி நடவடிக்கைகளும்**

சுகாதார அமைச்சின் ஊடாக, எல்லா பொறுப்பு கூறக்கூடிய நிறுவனங்களையும் உள்வாங்கி மதுபாவனை கட்டுப்பாடு தொடர்பான கொள்கை அமுலாக்கத்தை செயற்படுதல்.

**கண்காணித்தல், சுயபகுப்பாய்வு செய்தல்**

மாவட்ட, மாகாண மட்டங்களில் தேசிய மதுபாவனைக் கட்டுப்பாட்டுக் கொள்கையில் உள்ள சரத்துகளை அமுல்படுத்தி, கண்காணித்து சுய பகுப்பாய்வு செய்து நடைமுறைப்படுத்துவதை பிராந்திய சுகாதார பணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் மாவட்ட உளநல ஒழுங்கிணைப்பாளர் மேற்கொள்வதை, மாகாண சுகாதார பணிப்பாளர் ஒழுங்கிணைத்து அதற்கான தரவுகளை கிரமமாக ஆய்வு செய்து அவற்றிற்கான அறிக்கைகளை மத்திய சுகாதார அமைச்சின், இத்திட்டத்திற்கு நேரடி பொறுப்பான உளநல பணிப்பாளரிற்கு கிரமமாக அனுப்புதல் வேண்டும். தேசிய உளநல பணிப்பாளர் இக்கொள்கையில் உள்ள சரத்துகளை உரிய முறையில் அமுல்படுத்துவதற்கான, பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, நீடித்து நிலைக்கக்கூடிய, மிகப்பொருத்தமான மீளாய்வு பொறிமுறைகளை உருவாக்கி, தேசிய போதைப்பொருள் கட்டுபாட்டுச் சபையுடன் இணைந்து இக்கொள்கை திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின், அதனால் ஏற்பட்டுள்ள மாற்றங்களை சரியான முறையில் ஆய்வு செய்து கண்டறிவதற்கு ஏதுவான, பயனுடைய முறைகள் அனைத்தையும் செய்வதற்கு உறுதுணையாக இருத்தல்.

தொடர்ச்சி...

## மாவீரர் தினத்துக்குத் தடை கோரி மனு

இந்த மனுவை ஆராய்ந்த யாழ்ப்பாண நீதவான், தீர்ப்பை 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அறிவிப்பதாக அறிவித்துள்ளார்.

## 'நாம் இளைஞர்கள்' கண்காட்சி'



எம்.பஹ்த் ஜுனைட்)

அன்பிற்கும் வாழ்விற்குமான இளைஞர்கள் அமைப்பினால்(YLL) "நாம் இளைஞர்கள்" என்ற கருப்பொருளில் இளைஞர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை (18) நாவற்குடா தீபன் அரங்கில் நடத்தப்பட்டது. இக்கண்காட்சி நிகழ்வினை மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி. சரவணபவன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்ததுடன் இளைஞர்களுக்கு தன்னம்பிக்கை வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளும் வழங்கி வைத்தார். சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர் சிறிஸ்கந்தராஜாவும் கலந்துகொண்டார்.

இந் நிகழ்வில் சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் போன்ற 14 விடயங்களை இளைஞர்கள் காட்சிப்படுத்தி இருந்ததுடன், அவரின் திறமைகளை வெளிக்கொணரும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் அதிகளவிலான இளைஞர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி...

## 4 பேர்ச்சர்ஸ் காணியிலும் கட்டிடம் கட்டலாம்

ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நகருக்குள் இடப்பற்றாக்குறைகள் அதிகரித்து வருவதால் தம்மிடமுள்ள காணிகளின் விஸ்தீரணத்துக்குள் கட்டிடங்களை அமைக்க முடியாமல் உள்ளதாக பொதுமக்கள் சிலர் முதல்வருக்கும், மாநகரசபைக்கும் விடுத்த வேண்டுகோளிற்கு இணங்க இந்தத் தீர்மானமானது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டதும் மாநகர எல்லைக்குள் இந்த புதிய தீர்மானம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சி...

## மட்டக்களப்பு மழைக்கு: மரவள்ளி பொரியலும் மாட்டிறைச்சி சூப்பும்

நடக்கும். அதற்கு அநேகமாக முஸ்லிம் ஹொட்டல்களைத்தான் நாடுவோம். அப்போது ஹாஜியார் ஹொட்டலுக்குப் பக்கத்தில் இருந்த ஹொட்டலும், மார்கெட் பள்ளிவாசலுக்குப்பக்கத்தில் இருந்த ஹொட்டலும்தான் பேமஸ்.

மாட்டிறைச்சி சூப், அது மட்டக்களப்புக்குத் தனித்துவமான ஒரு சூப்.
வேறு எங்கேயும் அப்படியொரு சூப்பை நான் இதுவரை குடித்ததில்லை.

அந்த சூப்போடு மரவள்ளிப்பொரியலைச் சேர்த்துச் சாப்பிடுவதும் ஒரு பெரும் கலை.

சாதாரணமாக ஒவ்வொருவரும் ஒரு சூப்பும் நான்கைந்து மரவள்ளிப்பொரியலும் வாங்கிக்கொள்வோம். எல்லா மரவள்ளித்துண்டுகளையும் சூப்பின் உள்ளே போட முடியாது. துண்டுகளை நசித்துப்பார்த்து, பொருத்தமான துண்டுகளை தெரிவு செய்யவேண்டும்.

அவ்வாறு நசித்து சூப்பின் உள்ளே போடும் மரவள்ளிப்பொரியலின் உள்ளே சூப் ஊறி முழுத்துண்டையும் ஆக்கிரமிக்க வேண்டும். அப்படி ஊறக்கூடிய துண்டுகளை தெரிவு செய்வதில்தான் சூட்சுமம் இருக்கிறது. சூப்பில் ஊறிய துண்டுகளை கரண்டியால் தூக்கி



வாயினுல் வைத்ததும் அது அப்படியே தொண்டையினூடாக வழுக்கிக்கொண்டு போகும் பாருங்கள்....

எந்த பைஸ்டார் ஹொட்டலிலையும் அந்தச் சுவை கிடைக்காது.

இப்போது மட்டக்களப்புக்குப்போகும்போது முன்புபோல் நிறைய மரவள்ளிப்பொரியல் விற்கும் கொட்டகைகளைக் காணக்கிடைப்பதில்லை.

இருந்தாலும் காத்தான்குடி தாண்டிப்போகும்போது, கால் தானாக பிரேக் பிடித்து காரை நிறுத்திவிடும்.

இன்றைக்கு மழையில் நனைந்ததும் அந்த ஞாபகம் வந்தது. உடனே பக்கத்தில் இருந்த மார்கெட்டுக்குப்போய் கிழங்கு வாங்கி வந்து மட்டக்களப்பு ஸ்டைலில் பொரிக்க என்று அரைபோத்தல் எண்ணெயையும் வீணாக்கிய திருப்தியில் ஏப்பம் விட்டுக்கொண்டு எழுதி முடித்தேன்.

தொடர்ச்சி...

## மாவீரர் நாள் நவம்பர் 27 - தமிழர்களின் நடுகல் வழிபாட்டின் பிரதிபலிப்பு

துயிலுமில்லம்,
மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி மாவீரர்துயிலுமில்லம். பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலுமில்லம்.

வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம்மாவீரரதுயிலுமில்லம் திருகோணமலை மாவட்டத்தில் ஆழங்குளம் ;மாவீரர்துயிலுமில்லம் தியாக வனம் மாவீரர் துயிலுமில்லம். பெரியகுளம் மாவீரர் துயிலுமில்லம், உப்பாறு மாவீரர் துயிலுமில்லம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தரவை மாவீரர் துயிலுமில்லம். தாண்டியடி மாவீரர் துயிலுமில்லம். வாகரை கண்டலடி மாவீரர் துயிலுமில்லம். மாவடிமுன்மாரி மாவீரர் துயிலுமில்லம். அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடியாறு மாவீரர் துயிலுமில்லம் என 27 மாவீரர் துயிலும் இல்லங்கள் 2008ஆம் ஆண்டு இறுதிவரை இருந்தன.

2009ஆம் ஆண்டு யுத்தம் உக்கிரமடைந்த பின்னர் தர்மபுரம் மாவீரர் துயிலுமில்லம். சுதந்திரபுரம் மாவீரர் துயிலுமில்லம். இரணைப்பாலை மாவீரர் துயிலுமில்லம். பச்சைப்புல்வெளி மாவீரர் துயிலுமில்லம் கரையா முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லம். வெள்ளா முள்ளிவாய்க்கால் மாவீரர் துயிலுமில்லம் என ஆறு மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைக்கப்பட்டன.

2009க்கு பின்னர் இந்த மாவீரர் துயிலும் இல்லங்களில் இருந்த கல்லறைகளும் நடுகற்களும் அழிக்கப்பட்ட போதிலும் 2015ஆம் ஆண்டுக்கு பின்னர் அந்த இடங்களில் நவம்பர் 27ஆம் நாள் வணக்க நிகழ்வுகளை மக்கள் நடத்தி வருகின்றனர். இறந்தவர்களின் கல்லறைகளையும் நடுகற்களையும் அழிப்பதோ சேதப்படுத்துவதோ அல்லது வணக்க நிகழ்வுகளை தடுப்பதோ மரபுவழி வந்த வழிபாட்டு முறையை தடுப்பதாகவே அமையும். எதிரியாக இருந்தாலும் கல்லறைகளுக்கு மதிப்பளிக்க வேண்டியது மானிட தர்மமும் ஒழுக்க நெறியுமாகும்.

தன்னோடு போர் இட்டு மடிந்த எல்லாள மன்னனுக்கு துட்டகைமுனி சிலை அமைத்து வழிபாடு செய்த பாரம்பரியத்தை கொண்ட இலங்கை மண்ணில் சங்க காலம் தொட்டு இருந்து வரும் தமிழர்களின் நடுகல் வணக்க நிகழ்வை வழிபாட்டு முறையை தடுக்க நினைப்பது மானிட தர்மத்திற்கும் எதிரானதாகும். மாவீரர் நாள் வணக்க நிகழ்வு என்பது மனதை நெகிழ வைக்கும் வழிபாடாகும். அது உலகில் வேறு எங்கும் காணமுடியாது.

கல்லறை முன் நின்று உறவுகளின் விம்மலும் அழுகையும் ஓங்கி ஒலிக்க தீபம் ஏற்றி வழிபாடு செய்யும் மாவீரர் அகவணக்க நிகழ்வு தமிழர் வாழ்வியலிருந்து இன்று அகற்ற முடியாத ஒன்றாக மாறிவிட்டது. தங்கள் உறவுகளின் கல்லறை மீது தலைவைத்து அழுவதற்கான உரிமையை யாரும் தடுத்து விட முயல்வது தர்மமாகாது.

தொடர்ச்சி...

## துறைசார் கலைஞர்கள் பத்துப் பேர் கௌரவிப்பு!

செ.மணிமாறன்(இலக்கியம்) கே.ஜெயராஜீ(இலக்கியம்) என். சத்தியநாதன்(நாட்டுக்கூத்து) இ.இராஜமோகன்(பாடகர்) கு.அருமைத்துரை(நடிகர்) திருமதி ச. சத்தியவதி(இலக்கியம்) எம். பி.அன்வர்(கவிதை) ஆகியோர் நினைவுச்சின்னம், சான்றிதழ் மற்றும் பரிசுகள வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் கணக்காளர் செல்வி என். ஜெயசர்மிகா பிரதிதிட்டமிடல்பணிப்பாளர் எஸ்.விவேகானந்தராஜா நிருவாக உத்தியோகத்தர் ரி.கமலநாதன் கிராமசேவை நிருவாக உத்தியோகத்தர் எஸ்.புவனேந்திரராஜா கலாசார உத்தியோகத்தர் எம்.சதாகரன் உள்ளிட்டோரும் கலந்து சிறப்பித்தனர்.

தொடர்ச்சி...

## வியப்பிலாழ்த்தும் மட்டக்களப்பு ஆகமம் சாரா தெய்வ வழிபாட்டுமுறைகளும் சடங்குகளும்

மந்திர முறைகளையும் புராதன வழிபாட்டு முறை சில இடங்களில் பெற்றுகொண்டது. வேட வழிபாட்டு முறையில் கப்புகன் எனவே பூசாரியை அழைப்பர். இப்போது வேடப் பூசாரி என்ற புதுச் சொல்லும் வந்து சேர்ந்தது.

இவையாவும் இடைக்காலத்தில் நடந்தேறியனவாக இருக்கலாம். மூன்றாம் கட்டம் இன்னும் பல மாற்றங்களை இந்த வழிபாட்டு முறையில் கொணர்ந்தது அடுத்து அதனைப் பார்ப்போம்

(தொடரும்)

தொடர்ச்சி...

## பருத்தித்துறை நகரபிதா மட்டக்களப்பு மாநகர சபைக்கு விஜயம்

மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் இடம்பெற்ற திட்ட முன்னிலைப்படுத்தல் நிகழ்விலும் கலந்து கொண்டனர்.







Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa